23486 (8568)

கணபதி துணை

# குன்றக்குடியி லெழுந்தருளியிருக்கும் சிவசுப்பிரமணியக்கடவுள் குறவஞ்சி.



23486 (8568)

இது
பரமேஷ்டி குலத்தில் அவதரித்த
குன்றக்குடித் திருவண்ணாமலை யாதீனம்
மகாவித்வான் வாணிதாச
வீரபத்திரக் கவிராயரவர்களால்
இயற்றப்பெற்று
மேற்படியார் பௌத்திரர்
வீரபத்திரக் கவிராயரால்

கும்பகோணம்
ஸ்ரீ ஹயவதன விலாஸ பிரஸில
பதிப்பிக்கப்பெற்றது. 1914 வரு

உ

கடவுள் துணை

## நூலாசிரியர்

# சரித்திரச்சுருக்கம்

MADRAS-90

பாண்டியதேசத்திலே இராமநாதபுரம் சமஸ்தானம்
அபிராமமென்னு நகரிலே புகழேந்திப்புலவர் மரபில் வேளா
ளர் குலத்திலே சுமார் நூற்றறுபது வருடங்கட்குமுன்னே
அதிதீவிர புத்திசாதுரியமுள்ளவரும் ஏகசந்தைக்கிராகியுங்
கணக்கில் மிகநிபுணரும் பற்பல கிராமக்கணக்கர்களுக்குந்
தலைமையுற்றவரும் ஓர் பெரிய அதிகாரிமுன் இவர் அந்தச்
சித்ரகுப்தனே யாகுமென யாவரும் அதிசயிக்கும்படி யொரு
வெள்ளோட்டைக் கையில்வைத்துப்பார்த்துக்கொண்டு பற்பல
கிராமகணக்கைக் கொஞ்சமுந் தவறன்றி வாசித்துங் கீர்த்தி
பெற்றவருமாகிய அங்கப்பபிள்ளையென்பவ ரொருவரிருந்தார்
அவர்முத்திருளாயியென்னுமோர்கன்னிகையைமணம்புரிந்து
முறையேயில்லறதருமத்தை நடாத்தி இவ்விருவர்செய்யும் பூர்
வபுண்ணியமே யோருருக்கொண்டுவந்ததன்ன புகழேந்திகுல
தீபம்போ லோர்மகவைப்பயந்து அம்மகவுக்கு வீரபத்திரனெ
ன்ன நாமகரணஞ்செய்து ஐந்தாவதாண்டில் வித்யாப்பியாச
ஞ்செய்விக்க ஓதியுணர்ந்த தன்புத்ரனுக்குப் பிதா தம் உத்
யோகத்துக்குத்தக்கவழிகளைக் கற்பிக்கவே யவைகளைக் கவ
னியாது பரம்பரையான வித்வத்தொழிலிலேயே தன்மனம்
ஊக்கமாக இருப்பதையு நிகண்டுமுதலிய இலக்கியங்களைக்
கற்பதையுங் கவிபாடுந் திறமையையுந் தந்தையுற்றுணர்ந்து
தன்மனைவியை யழைத்து இவனம்முடைய உத்யோகத்தொ
ழிலுக்கு அருகனல்ல இவன் மனம் நம்முடைய பரம்பரை
யான வித்வத்தொழிலையே நாடிக்கொண்டிருப்பதால் இவ
னைப் புதுக்கோட்டைச்சமஸ்தானம் இராயபுரத்தில் நம்mு
டைய பந்துக்களில் சுப்பிரமண்யக்கவிராயரென்பவ ரொருவரி

ருக்கிறாள் அவளிடமழைத்துக்கொண்டு போய் விடவேண்டு மென்கிற எண்ணத்தையுரைத்துச் சிலநாளிருந்து இந்த அங்கப்பபிள்ளையென்பவருஞ் சிவபதவி யடைந்தனர். அப்பொழுதிக்குழந்தைக்கு வயதொன்பதாயின ......................

பின்னர் இவர் மனைவியாரும் அவ்வூரிற் சிலநாட்டங்கியிருந்து கணவன் மொழிந்ததை நினைந்து தன்புதல்வனையழைத்துக் கொண்டு சிவகங்கைமார்க்கமாக இராயபுரத்துக்கு வரும்வழியில் திருவுடையார்பட்டியென்னு மோரூரின் குளத்தருகிற் றங்கித் தந்ததாபனமுதலியனசெய்து கட்டமுதருந்தின பிற்பாடு ஓரிடத்திருந் திளைப்பாறிக்கொண்டிருந்தனர் அப்பாலவ்வூரிற் றக்கசமுசாரியும் பெருந்தன்மையும் பரோபகாரியுமான சூரியக்கோனென்பவன் வந்து நீங்கள்யார் எங்கிருந்து வருகிறீர் எவ்வூர்க்குச்செல்கிறீரென இந்த அம்மாளுந் தன் குடும்ப விருத்தாந்தங்களையும் இப்பொழுது தன் குழந்தையைத் தானழைத்துச்செல்லு மெண்ணத்தையுந் தெரிவிக்கவே யவைகளைக்கேட்ட சூரியக்கோனென்பவன் சொன்னதாவது அம்மணீ யிந்தக் குழந்தைக்குப் படிப்பு ஏதேனும் வருமா வென நன்றாய் வாசிப்பா னென்றோர் சுவடியை யெடுத்துக் கொடுத்து வாசிக்கச் செய்தனள் அதைக்கேட்ட சூரியக்கோனுஞ் சந்தோஷமடைந்து அம்மணீ யென்னுடைய குழந்தைகள் பேரன்மார்க ளிருப்பதால் என்வீட்டைத் தங்கள் வீடு போற் பாவித்து இக்குழந்தையைக் கொண்டு படிப்புச் சொல்லிக்கொடுக்கலாமா வெனக்கேட்கவே இவ்விருவருமதற்குடன்படுவதைச் சூரியக்கோனறிந்து தன்கூடவே யழைத்துச் சென்று தனியாக இவர்க ளிருப்பதற்கு வீடொன்றமைத்துக் கொடுக்க அவ்வீட்டிலிருந்து கொண்டு பிள்ளைகட்குப் போதிக்கும் உபாத்திமைத் தொழில்புரிந்து வரும் நாளையி லோர் நாள் குன்றக்குடித் திருவண்ணாமலை யாதீன மடாலயத்திற் குருபூஜை காலஞ்சமீபித்த படியாலிந்தச் சூரியக்கோனுக்கும் அங்கிருந்து திருமுகம் வரவே வழக்கப் பிரகாரங் கொண்டு போகும் பதார்த்தங்கள் யாவுஞ் சேகரித்து உபாத்தியாயராகிய இக்குழந்தையையு மழைத்துக்கொண்டு போகும் வழி

யிற் குன்றக்குடியின் வரலாறு சுவாமிபேர் தர்மகர்த்தராவாக இருக்கும் தம்பிரானவர்கள் பேர் முதலியவைகளைத் தன் உபாத்தியாயராகிய இக்குழந்தைக்கு விபரமாகத் தெரிவித்துச்சென்று தர்மகர்த்தராவாக இருந்தவருஞ் சபாபதித்தம்பிரானவர்களை வணங்கித் தான் கொண்டுபோன வரிசைகளை வைத்துக் கண்டுகொண்டனன்.

இதுநிற்கச் சூரியக்கோனென்பவனை ஸ்ரீலஸ்ரீ தம்பிரானவர்கள் நோக்கி யுன்னுடன் கூடவந்திருக்கு மிந்தச் சிறுவன் யாரென்று வினவவுந் தம்பிரானவர்கள் சொல்லி வாய்மூடு முன்னர் தன்னூர் பேர் தன்தந்தையின் வரலாறு தாயார் தன்னை யழைத்துக்கொண்டு வந்திருக்குங் காரணம் யாவும் எழுதாமலே யோர் செய்யுளினாதிவிரைவா யமைத்துரைக்கக் கேட்ட தம்பிரா னவர்க ளுள்ளத்தடங்கா மகிழ்ச்சி பொங்க ஆச்சரிய முடையராய்ச் சூரியக்கோனை நோக்கி யிக்குழந்தை நம்மிடமே யிருக்கட்டும் நீ போய்வாவென வேண்டிய மரியாதை செய்தனுப்பவே யாதவ சிரேஷ்டனாகிய சூரியக்கோனுக்குத் தன் உபாத்தியாயரை விட்டுப் பிரிய மனம் வராமல் வருத்தமுற்றவனாய்த் தம்பிரானவர்கள் கட்டளையை மீறி நடக்க முடியாதவனாகத் தன்னூர்க்குச் சென்றனன்.

பிறகு சூரியக்கோன் வீட்டிலிருந்த இவர் தாயாரையுந் தம்பிரானவர்களால் வரவழைத்து இவரையும் இவர் தாயாரையும் இராயபுரத்துக்குச் சுப்பிரமண்யக் கவிராயரிடம் அனுப்பினர் அது முதலிவர் பந்துக்களு மடத்துக்கு வரப்போக இருந்தனர் அக்காலத்தி லிவருக்கு வயது பன்னிரெண்டாகும் இவர் சரஸ்வதி யனுக்ரகத்தா லெச்செய்யுளும் இடர்ப்படாமலே பாடுவதில் வல்லவர் இவர் திறமையைக் கண்டு மெச்சாதவ ருலகத்தி லொருவரு மில்லை இக்குழந்தையின் செய்கையை வெண்பாப்புலிக் கவிராயர் கேள்வியுற்று இப்புவியினம்மைவிட வேறொரு வனுமுளனோ வெனச் செருக்கடைந்தவராய் ஸ்ரீல ஸ்ரீ தம்பிரானவர்க ளிருக்குமடத்துக்குள் வரக் கண்ட தம்பிரானவர்க ளுபசரிக்கவும் அவரை நோக்கி ஹே சபாபதி யிங்கோர் வித்வச்சிறுவன் வந்திருப்பதாகக் கேள்வி

ப்பட்டு வந்தனம் அவ னெங்கேயென்று வினவ வித்வா னிங்கில்லை சகலமும் அவடந்தானென்று விடை கூறுவதை யறிந்த வெண்பாப்புலிக்கவிராயர் கோபங்கொண்டு அவ னெங்கிருந்தாலு மழைத்துவர வேண்டுமென்று போதை வெறியாலுரைக்கவே யதைத் தம்பிரானவர்கள் கேட்டு அவன் சிறு குழந்தை விளையாடப் போயிருப்பா னென அவனை நா மவசியம் பார்க்கவேண்டும் மறுக்கின் வசைபாடுவோ மென்றுரைக்கக் கேட்ட தம்பிரா னவர்களு மக்குழந்தையை வரவழைத்தருகில் விடவே யச்சிறுவனை வெண்பாப்புலி நோக்கி நீயாவித்வானென அக்குழந்தையும் ஆம் நான்தான் வித்வானென்றுரைக்க உனக்கென்ன பாடவரு மென்று வெண்பாப்புலிக்கவிராயர் வினவ அக்குழந்தையும் நானெவையும் பாடுவேனென்று சற்றும் அஞ்சாமல் விடைகூறுவதை யறிந்து அகம்பாவமேலிடவே சிறுபயலா யிம்மூன்றுஞ்செப்பு என்றோர் சமஸ்தியைச்சொல்லி நாயிந்த மயின்மலையைப் பிரதட்சணஞ்செய்து வருவதற்குள் முன் மூன்றடியு முடித்துச் சொல்லையாவென ஏன் அவ்வளவு தாமதம் இப்பொழுதே கேட்டுக்கொண்டு போகலாமேயெனப் பாடியவெண்பா,

அற்பனுக்குச் செய்நலமு மாரணங்குக் குட்புலனு
மிப்புவியி லுன்பெரியோ னென்பவனு—மெய்ப்பாம்
அறிவனுக்குக் கேடாகுமாராய்ந்து பார்க்கிற்
சிறுபயலா யிம்மூன்றுஞ்செப்பு.

எனவே சமஸ்தி முடிந்திருப்பதையும் அதி னமைந்திருக்கு மூன்று வித விஷயங்களையுஞ் சொன்னயம் பொருணயங்களையு மறிந்து திடுக்கிட்டு வெண்பாப்புலிக் கவிராயருக்கு மார்பில் வேல்கொண்டு தைத்ததுபோற் றைத்து அச்சமு நாணு மதிகரிக்கத் தம்பிரானவர்களை நோக்கி யிவர்பேர் யாதென்ன இவர் பேர் வீரபத்திரனென்றுரைக்கக் கேட்ட வெண்பாப் புலிக்கவிராயரும் நமது கெருவத்தை யடக்கும் பொருட்டு அந்தச் சரஸ்வதியே யிவ்வுலகத்தி னிவ்வுருக்கொண்டு தான் வந்தனளோ அல்ல திந்த மயூரகிரிக்கடவுளே இந்த வீரப்புலியைச் சிருஷ்டித்து நம்மைச் செயிக்கும்படி விடுத்தனரோ யாதோ தெரிகிலேமென் றையுற்றவராய் நாம் வெறும்புலி

யிவர் விரப்புலியானதா லிந்த விரப்புலியிருக்குமிடத்துக்கு நாமுள்ளாவரை யொருநாளுமனுகே மெனவும் இன்றுமுதலி வர்க்கு வாணிதாசனெனவும் வாக்களித்துச் சென்றனர்.

அன்றுமுதல் மயூரகிரிநாதர் பரிபூரணகிருபையாலே தம்பிரானவர்களபிமானம் பெற்று ஸ்ரீலஸ்ரீ திருமெஞ்ஞான பண்டாரசந்நிதியவர்களைத் தமிழாசிரியராகக் கொண்டு இலக்கிய இலக்கணங்களிலும் வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களிலு மிக்க தேர்ச்சியும் இயலிசை நாடக மென்னு முத்தமிழினும் பெரும்பாலும் அடைமொழியின்றி நவரச மொழுகும்படி பாடுஞ் சாமர்த்தியமும் பண்டித பாமரர்களுக்கும் ரஞ்சனமுண்டாகும்படி பிரசங்கிக்கும் வல்லபமு முள்ளவராயிருந்து இராயபுரத்திற் சுப்பிரமணியக்கவிராயர் புத்திரியை விவாகம் புரிந்து குன்றக்குடித் திருவண்ணாமலை யாதீன மடாலய வித்வான் வாணிதாச வீரபத்திரக் கவிராயரென்னப் பற்பல வித்வான்களும் புகழ்ந்துகூற வந்தவிருந்தினர்கட் கமுதுபுரிவித்தும் வரும்விருந்தை வழிபார்த்தலும் உடையராய்த் தமதில்லற விருத்தியை வழுவுதலின்றி நடாத்தி அகமதுமகிழ உறவினர்புகழத் தனகனக வஸ்துவாகனங்கள் பெருக வாழ்ந்து வருநாளையி லிவருக்கு வயது முப்பத்திரண்டாகும்.

அப்பொழுது ஸ்ரீலஸ்ரீ சபாபதித் தம்பிரானவர்கள் வேலாயுதத்தம்பிரானவர்கள் மனோபீஷ்டப்பிரகாரம் இவ்வித்வசிரேஷ்டருந்திருவாரூர் மனுநீதிச்சோழன் றேரூர்ந்த சரித்திரமும் வள்ளிகல்யாண விலாசமும் பாடியும் பின்னர்குன்றக்குடிச் சிவசுப்ரமணியக்கடவுள் பேரிற் றலைவன் பவனிவரவு, மகளிர்காமுறுதல், மோகினிவரவு, உலாப்போந்த தலைவனைக்கண்டு மயங்கல், திங்கள். தென்றனை, முதலிய, உபாலம்பனம் பாங்கியுற்றதென்னென வினவல், தலைவி பாங்கியோடுற்றது கூறல், பாங்கி தலைவனைப்பழித்துக் கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்துகூறல், தலைவி பாங்கியைத் தூதுவேண்டல், தலைவி பாங்கியொடு தலைவனடையாளங்கூறல், குறத்தி வரவு தலைவி குறத்தியை மலைவளமுதலியன வினவல், குறத்தி மலைவள நாட்டுவள முதலியன கூறல், தலைவன் தலவளங் கிளைவள முதலியன கூறல், குறிசொல்லி வந்தமை கூறல் தலைவி

குறிவினவல், குறத்தி தெய்வம் பரவல், குறிதேர்ந்து நல்வரவு கூறல், தலைவி பரிசிலுதவி விடுத்தல், குறவன் வரவு புள் வரவு கூறல், கண்ணிகுத்தல், புட்படுத்தல், குறத்தியைக் காமுற்றுத்தேடல், குறவன் பாங்கனோடு குறத்தி யடையாளங்கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல், குவன்னனி முதலியன கண்டையுற்று வினவலும். ஆங்காங்குக் குறத்தி விடைகூறலு, மாகக் கூறல். முதலிய இவ்வகையுறுப் புக்களையுடைய குறவஞ்சி ப்பிரபந்தத்தைப்பாடி யரங்கேற்றி அதற்காக ஸ்ரீலஸ்ரீ சபாபதித்தம்பிரானவர்கள் வேலாயுதத்தம்பிரானவர்களால் ஷை தேவஸ்தானம் கிராமங் காட்டாத்தாங்குடியில் நாயகப்பிறப்பானென்னும் ஓர் சர்வமான்னிய கிராமத்தை விட்டுக்கொடுக்கப்பெற்றும் குதிரை பல்லக்கு சால்வை தோடாக்கள் முதலியன பரிசளிக்கப்பெற்றும் ஐந்து கோயிற்றிருவிழாக்கட்டளைகளும் தினந்தோறுங் குன்றக்குடிச் சிவசுப்ரமணியக்கடவுள் கோவிற் பிரசாதங்களும் ஸ்தல மரியாதைகளும் நடைபெற்று வந்தன இன்றும் அம்முறையே நடைபெற்று வருகின்றன.

அஃதான்று விஸ்வகுல சிரேஷ்டர்களான கண்ணாளர்கள் தங்கள் சாதியார்பேரில் குறவஞ்சிப்பிரபந்தம் ஒன்று பாடவேண்டுமென்று கேட்கவே யவர்க ளபீஷ்டப்பிரகாரம் இவ்வித்வ சிகாமணியும் மாந்தைக்குறவஞ்சி யென்னுமோர் பிரபந்தத்தைச் செய்தரங்கேற்றி யன்னவர்கள் சிவிகை தொட்டுவரவே சிவிகையேறி ஊர்வலம் வந்தும் வருடந்தோறுங் குடிக்கொருபணந்தருவதாகக் கூறுசாதனமுங் கொடுக்கப்பெற்றும் இன்னமும் அவர்களால் அநேக மரியாதைகளுந் தரப்பெற்றவர் இக்கவிராயரவர்களால் அநேக அருமையான நூல்கள் செய்திருப்பதிற் சிற்சில பிரபந்தங்கள் அக்னிபாதையாற் றவறிப்போய் விட்டனவாகப் புலப்படுகின்றன.

இது நிற்க சமிவன க்ஷேத்திரமென்கிற கோவிலூரிற் றிருப்பணிபுரியுங்கம்மாளர்கள் தங்கள் குலத்தார்பேரிற் பாடியிருக்கு மாந்தைக்குறவஞ்சிப்பிரபந்தத்தை மறுமுறை பிரசங்கித்துக்கேட்கவேண்டுமென்ற அவாவுற்றுத் தங்களெண்ணத்தை ஷை கவிராயரவர்களுக்குத் தெரிவிக்கவே அதற்கவரு

னப்படியே செய்வோமென உடனே விஸ்வகுலோத்தமர்களும் ஆண்டவரென்கின்ற முத்துராமலிங்க சுவாமிகள் முன்பொருங்கெய்திச் சுவாமி குன்றக்குடித் திருவண்ணாமலையாதீன மடாலய வித்வானவர்கள் எங்கள் குலத்தார்பேரில் மாந்தைக்குறவஞ்சி யென்னு மோர்பிரபந்தஞ் செய்திருக்கின்றனர். அதை மறுமுறை கேட்கவேண்டுமென்கின்ற எண்ணத்தை நாங்கள் கொண்டிருப்பதால் பரிசளித்தல் முதலியவற்றிற்கு ரூபாயிருநூறு வரையில் வேண்டுமானதால் கொடுக்கும்படி உத்தரவாகவேணுமென்று கேட்கவே அதற்கச்சுவாமிகளும் அவர்கள் கருத்துக்கிணங்காது மறுதலிக்க அப்பொழுது அச்சுவாமிகள் சமீபத்திலிருந்த வேறொருசுவாமியா ரிக்கண்ணாளர்களை நோக்கி நீங்கள் சொல்லுங் கவிராயர் வேதாந்தக் குறவஞ்சி பாடுவாரோவென அதற்கு அவர்கள் சொன்னதாவது இந்தக்கவிராயரவர்கள் எந்தச்சாஸ்திரங்களிலும் வல்லரானதால் தாங்களிப்போது சொன்ன வேதாந்தக் குறவஞ்சியும் பாடுவாரென்றுரைக்கக் கற்றுப் புராணாதிகளைச் செய்வாரே யன்றி வேதாந்த சாஸ்திரங்க ளெவ்விதம் வரும் நீங்கள் சொல்வது சுத்தப்பிசகு நந்தவனத்தாண்டிக்கும் முசல்வேட்டைக்கும் ஒவ்வுமாவென்றிகழ்ச்சியாகப் பேசுவதையெல்லாம் கண்ணுற்றார்களா விக்கவிராயரவர்கள் கேட்டறிந்து உடனே பாடியனுப்பிய செய்யுள்.

தொகுத்தமறை கடந்தமெய் நூலுணர்வறியா வுயிர்கள்பவத்
தொடக்கு நீங்க
மிகுத்தகல்வி யுயர்த்துமுத்து ராமலிங்க தேசிகர் மென் முக
ங்கண் டேகி
அகத்தியன்கா லகத்திருந்தான் வாணியுந்தா மரையகமே
யார்ந்தாள் வேதன்
வகுத்திடுநந் தொழிலினியே தென்றுதந்தை யுந்தியினுள்
வசிக்கின் றானே.

என்னுமோர்செய்யுளைப் பாடியனுப்பவே யச்செய்யுளை ஆண்டவராகிய சுவாமிகள் வாங்கிப்பார்த்து வித்வான்கள் போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடிற் றூற்றினுந் தூற்றுவ ரானதா லிக்கவியின் மற்றதெல்லாஞ் சரி மறைகட

ந்த மெய்நூ லென்றிருப்பது பெருங்குற்றமாகு மென்றுரைக்கக் கேட்ட கம்பியஅறிஞர்கள் தேசிகரைப்பார்த்து இக்கவிராயர் மகாவித்வானானதா லிவர்கவியிற் சிறிதுங்குற்றமிராது. ஏதோ அந்தஇடத்தில் வினயமாக இருக்கலாம் அவரை யிவ்விடம் அழைத்துவருகிறோமெனவே அதற்குச் சுவாமிகளும் அவர் வித்வானாக இருப்பதா லிதற்காக வரவழைப்பது மரியாதையல்ல கோவிலுக்குச் சுவாமிதரிசனத்துக்கு அவர் ஒருவாறு வந்தாலும்வரக்கூடும் அக்காலத்திற் சந்தித்துக்கொள்ளுவோமெனவே யிச்சமாசாரங்களை யெல்லாம் கம்பியர்களாலுணர்ந்த அப்புலவர் சிகாமணியும் அன்றிரவிற் கோவிலுக்கு சுவாமிதரிசனத்துக்குச் சென்றனர் அக்காலையி லாண்டவராகிய தேசிகருங் கோவிலுக்குவரவே இருவருஞ் சந்தித்துக் கவிராயரவர்களுக்குக் கிரமப்படி கோவிலில் நடத்தவேண்டிய மரியாதைகளு நடப்பித்துச் சுவாமிகளுங் கவிராயரவர்களும் அங்கோரிடத்திருக்கக் கவிராயரவர்கள் வேதாந்தசாஸ்திரப் பிரசங்கஞ்செய்ய அதனைக்கேட்டசுவாமிகளு மற்றோரும் பிர்ம்மானந்தபரவசமுள்ளவராகி யிருக்க மறைகடந்த மெய்நூலென்றிருப்பதிற் குற்றமுரைத்த சுவாமிகளுக்கு மறைகள் தந்த மெய்நூலென் றெடுத்துக்காட்டிச் சமாதானஞ்செய்யவே தேசிகரு மனமகிழ்ந்து மிகமிகப்புகழ்ந்து கம்பியர் கருத்தின்படி இருநூறுரூபா யளித்துத் தமதுமுன்னிலையில் மாந்தைக்குறவஞ்சிப் பிரபந்தத்தைப் பிரசங்கிக்கக்கேட்டுக் கவிராயரவர்களுக்கு தாமும் மரியாதை செய்தனுப்பினர்,

பின்போர்நாள் தொண்டமான் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தை யரசுபுரிகின்ற மகாராஜர் அவர்களிடஞ்சென்று அனேக தமிழ்வித்வான்களுக்குள் இவர் முதலாவது சம்பாவனை தரப்பெற்றவர் விப்பிரகுலத்திற் றோன்றிய ஓர் வித்வான் தக்கசன்மானம் பெறவேண்டுமென்கின்ற அவாவுடனே வந்து ஷை சமஸ்தானங்கார்பார் தானப்பிள்ளையைக்கண்டு தங்கள் பேரிலோர் அஷ்டநாகபந்தக்கவி பாடிக்கொண்டு வந்திருக்கிறேனெனத் தெரிவிக்கவே யவ்வார்த்தையை யப்பிள்ளையுங்கேட்டு அது பாடுகிறதாக இருந்தால் எவ்வளவு நாளையிற் பாடி முடியுமெனக்கேட்க அப்பிராமணனும் ஆறுமாதஞ்

செல்லுமென அப்படியானால் வித்வான்களையும் வைத்துக்கொண்டு மேற்படி கவியைக்கேட்கவேண்டுமென்கின்ற எண்ணமுள்ளவரா யிருக்கையில் குன்றக்குடியிலிருக்குந் திருவண்ணாமலையாதீன மடத்து வித்வானாகிய இவ்வீரபத்திரக்கவிராயரும் ஏதோகாரியார்த்தமாகப் புதுக்கோட்டைக்கு வந்தவர் இந்தத் தானப்பபிள்ளையைக்கண்டு பேசிக்கொண்டுபோகவேண்டுமென்கின்ற எண்ணங்கொண்டு இவர் கிரகத்துக்குவரவே பிள்ளையுங்கவிராயரை யுபசரித்திருக்கச் செய்து ஐயா, அஷ்டநாகபந்தம் பாடுகிறதாக இருந்தால் எத்தனை மாஸத்துக்குட் பாடலாமென கவிராயரும் அதென்ன மாதக்கணக்காவேண்டும் இப்பொழுதே பாடலாமென பிள்ளையும் அது எவ்விதம் பாடக்கூடும் அஷ்டநாகபந்தம் பாடுவது சிரமமல்லவாஎன கவிராயரும் சிரமமுள்ளவர்களுக்குச் சிரமந்தானென்று உடனே யைந்து நிமிஷத்துக்குள் மேற்படி அஷ்டநாகபந்தம் பாடி முடித்துக் காட்டவேதானப்பபிள்ளையும் வியந்து பிராமணனை வரவழைத்து இந்தச்சமாசாரங்கள் முழுவதுஞ்சொல்லி உபாயமாகச் சன்மானஞ்செய்ய அதனை யப்பிராமணன் வாங்காது கோபமுடனே தன்னூர்க்குய்ந்து அவ்வந்தணன் மந்திரவாதியானதால் மந்திரத்தால் ஓர் சர்ப்பத்தை யிக்கவிராயர்பேரில் விடுப்ப அந்தச்சர்ப்பமானது வந்து இவர் கிரபாரதியானதா லிவரைத்தீண்டுதற்கஞ்சி யிவரெங்குசென்றாலும் எங்கிருந்தாலும் எந்த இடத்திற்படுத்திருந்தாலும் இவர் கண்களுக்கு மாத்திரம் புலப்படுகிறதே யல்லாமல் வேறில்லை இதைக்கண்டு அச்சமேலிடக் கவிராயரு மிக்க கவலையடைந்து நாளுக்குநாள் தேகமெலிந்துகொண்டு வர இவரும் ஸ்ரீமயூரகிரிவாசகராகிய சுப்ரமண்யக்கடவுள்மீது அனேக கவிகளைப்பாடவே யடியார் குறைகளைத்தீர்த்து அவரவர் மனோபீஷ்டத்தை நிறைவேற்றி யாதரிக்கும் பரமகருணாநிதியாகிய முருகக்கடவுள் மனமிரங்கிச் சொப்பனத்திலோர் பெரியவர் போலச்சென்று, ஏ கவிஞ இக்கொடிய சர்ப்பம் உன்னை விட்டகன்றுவிடும் நீயொன்றுக்கும் கவலைப்படவேண்டாம். இதுமுதற்கொண்டு நீகாஷாயவஸ்திர தாரணஞ்செய்துகொள்ளென்றுரைத்து மறைந்தருளினார். அப்பால் கவிராயர்

விழித்துப்பார்த்துச் சொப்பனத்தி லருளிச்செய்ததை நினைத்து நினைத்து உள்ளத்தடங்காத மகிழ்ச்சியைக் கொண்டவராக இருந்தாலும் நாங்குடும்பியாக இருப்பதால் எவ்விதங் காஷாயந் தரித்துக்கொள்வதென் றையுற்றவராய் மீண்டும் அம்முருகப்பிரான்மீது கவிகளைப்பாடுவதாயினர் அக்கடவுள் சர்வஜீவ தயாபராமூர்த்தியாகையால் கவிராயர்மீது பிறகும் கருணைகூர்ந்து குன்றக்குடியில் வசிக்குந் திருவண்ணாமலையாதீன தர்மகர்த்தாவாகிய ஸ்ரீலஸ்ரீ வேலாயுதத்தம்பிரானவர்கள் பாற் கனவிற்சென்று நமதன்பனே உன் ஆதீனமடத்துக் கவிஞனுக்கு இப்பொழுது நேர்ந்திருக்கு மிடையூறுநீங்கவேண்டி நாம் அவன் கனவிற் சென்று அவனைக்காஷாயவஸ்திரதாரணஞ் செய்துகொள்ளும்படி தெரிவித்தோம் அதற்கவன் நான் குடும்பியானதா லெவ்விதமிக்காரியத்தைச் செய்வதென்று உடன்படாமலிருக்கிறதுந்தவிர நம்மையும் பாடுகிறான். ஆனதால் நீயாவது காஷாயவஸ்திரத்தை அவனுக்களித்து தரித்துக்கொள்ளும்படி செய்வாயெனத் தெரிவித்து உடனே மறைந்தருளினர். அப்பால் ஸ்ரீலஸ்ரீ தம்பிரானவர்கள் நித்திரைவிட்டெழுந்து சொப்பனத்திற் கண்டதைக் கருதிப் பேருவகையுற்றவராய்க் கவிராயர் வரவை யெதிர்நோக்கியிருந்தனர். அப்பாற் கவிராயரும் மடத்துக்கு வரவே தம்பிரானவர்களிவரைநோக்கி இது சுவாமி உத்தரவென்று காஷாயவஸ்திரத்தை யெடுத்துத்தமது திருக்கரத்தாற் கவிராயர் கையிற்கொடுக்க யாதொரு தடையுஞ்சொல்லாமல் கவிராயர் தமதிருகரத்தால் வாங்கித்தரித்துக்கொண்டனர் அப்பொழுதிவருக்கு வயது அறுபதுக்குமேலாகும் இவர்க்கு புத்திரர்கள் சபாபதிக்கவிராயர் முத்துசாமிக்கவிராயர் என இருவரிருந்தனர் இவர்களில் இளையகுமாரர் முத்துச்சாமிகவிராயர் காஷாயவஸ்திரதாரணஞ்செய்துகொண்டவர்.

ஓர் நாள் திருக்கோனக்குடியில் திருக்கோளநாதர் உற்சவத்திற்குப்போனகாலத்தில் அன்று தினம் சுவாமி குதிரைவாகனத்திலும் அம்பிகை அன்னவாகனத்திலும் எழுந்தருளி வரவே இத்திருக்கோலம் அமைந்திட ஓர் செய்யுள் பாடவேண்டுமென்று இவரை நோக்கி அவண் வந்த மற்றையவித்

2-3486



வான்கள் வேண்டிக்கொள்ள உடனே பாடிய செய்யுள்

பூவுடையார் தழுவுமணிப்புயமுடையா ராமர்களும் போற்றப் பூவி
னுவுடையாளன் பருக்காயனஞ்சமக்து வரப்பரிவுற் றருளி ணேக்கச்
சேவுடையார் கனமதிச்சிரமுடையார் திருக்கோனாதர் தாமும்
மாவுடையாராய்ப் பணியாரமுஞ்சுமக்து வீதியினில் வருகின் றுரே.

எனப்பாடவும் யாவரும் உவகை கூர்ந்தனர்.

ஒருகாலத்தில் ஒரு வருடம் மழையில்லாமல் நாடெங்கும் பஞ்சமாக இருந்ததால் ஸ்ரீலஸ்ரீ வேலாயுதத்தம்பிரானவர்கள் தமது கிராமக்குடிக ளடையுந்துன்பத்தைச் சகிக்காமல் மேற்படி தம்பிரானவர்களும் மடத்து உத்தியோகஸ்தர்களும் இக் கவிராயர் சகிதம் காட்டாத்தங்குடி சென்று கேடி கிராம தேவதையாகிய பொய்சொல்லாமெய்யரென்னும் ஐயனருக்கு அபிஷேகாதிகள் செய்வித்து பிராமணபோஜனமுநடாத்தி தம்பிரானவர்களும் இக்கவிராயரை அழைத்து மழைபெய்யும்படி தங்கள்வாக்கினுல் ஓர் கவிசொல்லவேண்டுமெனப் பாடியகவி

வெண்பா.

தருணமிது வாருந்தான் மாரிபெய்யக்
கருணைசெய்யாதிருக்கலாமா—வருணனிடம்
சீருரைத்துப் பொய்சொலா மெய்யரே யிக்கிடம்
மாரிபெய்யச்செய்வீர் வரம்

என்று ஓர் கவி கவிராயரவர்கள் வாக்கினுற்பாடவுமே உடனே ஆகாயத்தில் மேகங்களெல்லாக் திரண்டு கருத்து மின்னல் குமுறலுண்டாகி ஆறுமாதஜெலங்காணும்படியாக மழையைப்பெய்தன இதைக்கண்ட ஸ்ரீலஸ்ரீ தம்பிரானவர்களும் அதிசயித்து உள்ளத்தின் மகிழ்ச்சி பொங்கக் கவிராயரவர்களுக்கு கைகண்டி சால்வை தோடா முதலிய பரிசளித்து யாவருங் குன்றக்குடியை வந்தடைந்தனர். நாடெல்லாம் க்ஷாமநீங்கி க்ஷேமகரமுண்டாயின. இப்பெற்றிய பலவற்புதச்செயல் செய்துகொண்டிருந்த கவிராயரவர்கள் தமது76-ம் ஆண்டில் சிவபதமடைந்தனர்.

சரித்திரம் முற்றுப்பெற்றது.

மயூரகிரி வாசகர்துணை.

சிவமயம்

# சிறப்புப்பாயிரங்கள்

## இஃது

## காரைக் குடியிலிருக்கும் மழவை
## சிதம்பரபாரதியவர்களியற்றியது.

செய்யகுன் றைப்பதிவாழ் செவ்வேள் **குறவஞ்சித்**
துய்யதமிழ் நாடகத்தைச் சொல்லினான் — **வையமதில்**
வீரபத்தி ரக்க வினைசெய் யரக்கனைவெல்
வீரபத்தி ரக்கவிஞ னே.

## இஃது

## ஷையார் கனிஷ்டபுத்திரர்
## இராமஸ்வாமிஐயரவர்களியற்றியது

மாவளா மோங்கு மதுரைமா நகரைத்
தாவளா மாகத் தனிவீற் றிருக்கும்
எக்காட் டினுமுயர் தென்னா டெனப்பெயர்
பன்னாட் கொண்ட பாண்டிநன் னாட்டிட்
டியிரியிற் குலவுஞ் சிகண்டிமால் வரையும்
பகர்தரு மதுநதி பாய்ந்துசெல் விளையு
நிலவள நீர்வள நிறைபல வளங்களு
நலமிகு நியம நாட்டினிற் சீர்சால்
குன்றக் குடியாய்க் குலமுயர்ந் தோங்கக்
குன்றக் குடியுறுங் குமரன் மீது
பண்ணமை பத்தி பரவசற் பாத்திரன்
கண்ணிய மோங்கு கங்கா கோத்திரன்
சார்ந்தெவ் வுலகுந் தழைக்கு மெய்ப்புக
ழேந்தி வங்கிஷத் தினிதுற வுதித்தோன்
வெண்பாப் புலிக்கவி விளவுஞ் சமஸ்தியைப்

பண்பாய்ப் பாடிப் பரிசுற வென்றவன்
ஒருக்கான் மழையிலா துலகந் தவிக்கக்
கருக்கொடு மழைவரக் கவியுரைத் திட்டே
பஞ்சலட் சணங்களைப் பறந்திட வடித்துப்
பஞ்சலட் சணங்களைப் பழுதறக் கற்றோன்
புதுவைமன் னவன்பாற் போந்துயர் வித்வ
சதசுமுன் மரியா தையும்பெறு தீரன்
பாணியிற் பொருந்தும் வீணையிற் றிருந்து
மலர்வாணி தாச னலவர்க ணேசன்
விண்ணு ரமரர் விரும்பித் தொழுந்திரு
வண்ணு மலையா னிணம டாலய
வித்துவான் வீர பத்திரக் கவிஞன்
கண்டொடு கனியோ கரும்பி னிரத்தமோ
அண்டர்க் கமுதோ வமைந்தபா கோவெனச்
செஞ்சொற் றிகழ்ந்துற வஞ்சித் தமிழைப்
பாடினன் பாடிப் பலகவி வாணர்
கூடிய சபையார் குகன்சந் நிதியி
னரங்கேற் றவு நல் வரங்கள்பா லிப்ப
உத்தமன் வேலா யுதமுனி யுடனே
சத்திய வான்குழந் தாபுரிக் கரசும்
மனமகிழ்ந் தினிதின் வழங்குவாம் பரியுங்
கனகதண் டிகையுங் கைக்கணை யாழியு
மகர கண்டியும் வயிரக் கடுக்கனும்
பகரும் பீதாம் பரந்தோ டாவும்
வழாதைந்து கோயின் விழாக்கட் டளைகளும்
என்று மதியு மிலங்குநாட் காறும்
என்று மழியா திருந்திடு வளஞ்சேர்
சிறப்பார் நாயகப் பிறப்பா னேந்தற்
றுணியம் விளைந்து தழைக்குஞ் சர்வ
மானிய மும்பல வரிசையும் பெற்றோன்
தன்குலத் தலைமை சாலவான் கவிஞர்
மன்குல மணியென மருவினன் மாதோ.

இஃது

ஷை சிதம்பரபாரதியவர்கள் பௌத்திரரும்
அஷ்டாவதானம் மீனாட்சி சுந்தரமய்யரவர்கள்
புத்திரருமான சிதம்பரய்யரவர்க ளியற்றியது

குறவஞ்சி நூலைக் குலப்புலவ ரும்பாங்
குறவஞ்சி யேதலைகள் கோட்ட —வறைந்தனனாற்
புத்தமுதோ வென்னமயிற் பூதரவேண் மேல்வீர
பத்ரகவி தாசர பமே.

இஃது

ஷை யூர்சதாவதானம் வாலசுப்ரமணய ஐயரவர்கள்
இயற்றியது.

வெண்பா.

பதமார் குறவஞ்சிப் பாவைபங்கற் கென்றும்
பதமார் குறவஞ்சிப் பாவி— விதமாமென்
றாய்ந்தமைத்தா னண்ணன்பே ராதரித்த தாற்குன்றை
வாய்ந்த கவி வீரபத்ர மால்.

இஃது

ஷையார் கனிஷ்டர் சாமிநாத ஐயரவர்களியற்றியது

குறவஞ்சி கொண்கனூர் குன்றக் குடியான்
குறவஞ்சி மேற்காதல் கொள்ள— முறைசொற்றான்
சேணிற்செல் வாக்காற் செழிக்குநீர் பார்க்குதவும்
வாணிதாச வீரபத்ர மால்.

இஃது

தேவை ஸ்ரீவன்றேண்டர் மாணக்கருள்
ஒருவராகிய காரைக்குடி ராம-கு-ராம
சொக்கலிங்கச்செட்டியாரவர்க ளியற்றியது.

புறவஞ் சிவந்த மலர்வாவி மாட்டுமுற் போந்து சம
ணறவஞ்சி வந்தரு மாயூர வெற்ப னகமகிழ
நறவஞ்சி வந்தனை செய்தோ டியல்புற நற்றமிழாற்
குறவஞ்சி வந்தறைந் தான்வீர பத்திரக் கூர்ங்கவியே.

### இஃது

## இராயபுரத்திலிருக்கும் மழவைத் திருவிளையாடற் சுப்ரமண்யபாரதியவர்கள் புத்ரர் இராமசுவாமி ஐயரவர்களியற்றியது.

கார்படி வடிவாய்க் கைக்கோ டணிந்து
மேர்பெறு திகிரியு மேந்தி யெத் திசையுங்
காண்குற வாய்ந்த கமலமா விழியுஞ்
சேண்படு பொன்னகஞ் செறிந்துமா தங்க
வம்பரப் போர்வை யணிபெற விசைந்து
மும்பர்மா னிகரா யோங்கிய மயூர
கிரியினெஞ் ஞான்றுங் கேள்கிளர் வேலணிந்
தரியமா வரங்க ளன்பருக் கருள்வோன்
அற்புத லீலைக ளாங்காங்கியற்றி
விற்பன விவேகியர் மெய்யகத் திருப்போன்
தேவரு மோவருஞ் செய்யு முத் தொழின்
மூவருங் காணு முதல்வ னோர்குற
வஞ்சிக் கவாவுறும் வலியுணர்ந் தேகுற
வஞ்சிப்பா பந்தம் வகுத்தன னோர்காள்
வெண்பாப் புலிக்கவி விளம்புஞ் சமஸ்தியைப்
பண்பாய் முடித்த பாரபல்ய வாக்கி
மழைவளங் குன்றி மன்னுயிர் வாடித்
தழைபயிர் சாம்பித் தரித்திடாக் காலத்
தாங்குயர் மாரி யழைத்து மோர்பாவாற்
பாங்கெலா வளமும் பரப்பிய வரகவி
தளவ நகைத்திருத் தழூஉம்பொன்னி நாடான்
வளவர்கோன் வாயில் வரும்புக ழேந்திப்
புலவர் பரம்பரை பொலிந்திடத் தோன்றித்
தலைமைசேர் வாணி தாச வீர
பத்திரக் கவியெனும் பாவலர் சிகாமணிச்
சித்திர காமச் சீர்த்திபெற் றோனே

இஃது

## ஷையூரிலிருக்கும் இந்நூலாசிரியர் பௌத்திரர்

## வீரபத்திரக்கவிராயர் இயற்றியவை

*தேன்பாய மலர்செறியக் கொண்டலையுந் தண்டலையுஞ் செறிக்க வோங்கி, வான்பாயுஞ் செவ்வழிப்பண் பாடிமது கரம்பாயும் வழியின் வேயிற், கூன்பாயு மந்திகள்வே ழம்பரிப்பாய் தண்டலையுங் குரவை யார்ப்பான், மீன்பாயுந் தாமரையு மேற்பாயுங் கழனிகளு மிக்கபாண்டி.* (1)

*என்னாட்டிற் கற்றதனா லாயபயன் கூட்டிண்ணா மெழினா வல்லோர், பொன்னாட்டும் புகழ்நாட்டு நேமகன்னாட்டிடைய புனிதன் குன்றை, மன்னாட்டுந் தோகைமயிற் றிமருவுஞ் சண்முகவேள் வாமன் பர்க்குப், பன்னாட்டின் புறலகற்றி யாண்டருளெங்குமர குரு பரன்மீ தன்பால்.* (2)

*குறுமுனிநேர் புகழேந்தி வழித்தோன்ற லுயர்கங்கா குலத்தில் வந்தோன், சிறுபயலா யிம்மூன்றாஞ் செப்பெனாயீற் றடிகொடுபா முடியத் தேர்ந்தே, தறுகணிறு மாப்புறும்வெண் பாப்புலி நண் பாப்புலியே தாழவைத்தோன், மறுவறுமைந் திலக்கணமோ டிலக்கியமும் வழுவறக்கற் றுணர்ந்தமாண் பன்* (3)

*அருணகிரி யாதீனத் தேவசிகா மணிக்குருவி னருளா லுற்ற வரன்முறையின் வந்தசபா பதிமுனிவே லாயுதமா முனிநாட் டொட்டே, பிரபலமார் தருமைந்து கோயில்விழாக்கட்டளைகள் பிசகா வண்ணஞ், சருவமா னியங்குடிமை சிவிகைமுதற் பலவரிசை தரப்பெற் றிட்டோன்.* (4)

*சொல்யாழின் னிசைகருங்கட் பிணைமருங்கு லிழைசாயற் றோகை வள்ளி, கல்யாண மனுநீதிச் சோழன்றே ரூர்சரிதங் கனிசெந் தேனிற், பல்யாணர் புகழ்மாந்தைக் குறவஞ்சி முதலிய நூல் பகர்ந்தோன் றாண, மல்யானை வெங்கலமாக் கடைபுகுந்தா லெனப்ரசங்க மதுர வாக்கியன்.* (5)

திரணமும்வான் றுளியின்றி வளங்குன்றப் பயிர்வாடுஞ் செயல்கண் டின்னேன், றருணமிது வாமெனவோர் கவியுரைப்ப மழைபொழிந்து தழையச்செய்தோன், கருணிகர்தம் முதல்வனெனவெள்ளேடொன் றினைக்கொண்டோர் கழகமுன்ன ரருமையுறப் பற்பலகி ராமவா ரிக்கணக்கை யறையக்கண்டோர். (6)

சித்திரகுப் தனுமிவனே யெனச்சொல்லி யதிசயிக்குந் திறமை பூண்ட. வுத்தமசற் குணந்திகழுங் கப்பவள்ளல் செய்தவத்தா னுதவுஞ் செல்வப், புத்திரனு மலர்வாணி தாசனெனப் பூவுலகிற் பொருந்தும் வீர, பத்ரகவி ராசனுயர் குறவஞ்சித் தமிழ்தனைப் பாடினனால். (7)

இஃது

## குன்றக்குடியிலிருக்கும் அப்பாப்பிள்ளையென்று பெயர்வழங்கும்சாமிநாத பிள்ளையவர்க ளியற்றியது.

மாகுன்றை வாணருக்கு மன்னுகுற வஞ்சியின்ப
மேகுன்றா தென்ன விரித்துரைத்தான் — பாகமுறு
மிக்க கலை வாணி மேவுருவாம் வீரபத்ரத்
தக்ககவி ஞன்னறிந்தே தான்.

இஃது

## திருநெல்வேலிவண்ணார்பேட்டை பண்டித ஸ்ரீ சுந்தரமூர்த்திபௌராணிகரவர்கள் இயற்றியது

பொன்மணக்கு முயர்குன்றக் குடிவாழ்சுப் பிரமணியப் புத்தேட் கென்று, சொன்மணக்குங் குறவஞ்சிப்பாமாலை யெவ்வழுகுந் துன்றத் தந்தான், கன்மணக்கு மக்குன்றக் குடியில்வரு கவிஞர்மணி கனிந்து பாவின், மின்மணக்கு முயர்வீர பத்திரமாங் கவிஞனெனு மேலோன் றானே.

இ௦௦ஆ

## மூவல் ப. சிங்காரவேற்பிள்ளையவர்களியற்றியவை.

பொன்மருவு மாலையினா ளுலவாத மாதவத்தாற் புதல்வி யாகுங், கன்மருவு கன்னியினாற் சென்னிமதிப் பெருமானெனங் கருத்துளென்று, மன்மருவு மைமுகனா லறுமுகனா லரசாள வையமாகித், தென்மருவு பாண்டிநன் னாடதனு ளபிராமத் திருவூ ரொன்றாம். (1)

அகழேந்தியி னுயிர்க்குக் காவல் புரியந்நகரி னமுதப்பாவோன், புகழேந்தி யென்னவரும் புகழேந்தி யவன்மரபு பொலிந்து தோன்றத், திகழேந்து கங்கைகுல வங்கப்பக் குரிசில்செய் திறத்த தாகும், புகழேந்து புண்ணியத்தின் பயனொத்துப் புவித்தலத்தோர் போற்ற வந்தோன். (2)

புவிக்கினிய நற்குணமா மெக்குணமுந் தனக்கென்னப் பொறுக்கு மேலோன், கவிக்கினிய நாவலன்சபாபதிமுத் துச்சாமிக் கவிஞ ராகச், சவிக்கினிய கண்ணிரண்டே யெனப்புதல்வ ரிருவரையுந் தந்து வாழ்ந்தோன், செவிக்கினிய சமய கவி மழைபொழியு மதுவென்னத் தெளியச்சொல்வோன். (3)

குலமருவு மருணகிரி யாதீன முனிவர்வாழ் குன்றை யூராந் தலமருவு கவிஞனா யுலகன்பு மின்புமிவை தழைபே ரின்ப நலமருவா வெனத்துணிந்து முருகனடிக் கவிபுனைந்து நலகற் றரசவ், வலனருளால் வரப்புனையத் துறவடைந்து நல்வினைக் கமருவக் கண்டோன். (4)

கற்புடைய ரிருதிறத்த ரெனக்கூற மதியாது கடமை மாதர் கற்புடைமை கடவாரோன் மழையேவல் செய்யுமெனுங் கவிஞர் நாண, வெற்புடைய வேல்விடுத்த நாயகனை யுட்கொளீஇ விளங்க யாரும், பொற்புடைய சொற்கவியினான் மழையை வளமருவப் பொழிவித் தானால். (5)

23486
(8568)

குறவஞ்சி யணைந்தருளிக் குறைதீர்க்குங் குன்றைநகர்க் குமரனுக்குக் குறவஞ்சி கூறியிட்டான் கவியஞ்சிப் புலவோர்தங் குறையிலா வாய், திறவஞ்சி வாழ்த்திடவிம் மண்ணுலகும் விண்ணுலகுஞ்செம்மை யாய,அறவஞ்சி வழுத்திடுகல் வீரபத்திரக்கவிஞன் சொல்வோர்வாழி. (6)

## இஃது
## சிவகிரிமகாலிங்கப்புலவரவர்களியற்றியது

நாள்விரிபூ முகத்தினிரு வல்லிபுல்லுங் கதம்பன்மயி லூக மன்னும், வேள்விசய வேலவன்மேற் குறவஞ்சி விதியகந்தன் வேலை புண்டோன், வாள்விரவி ரவியுமெச்சப் புலவர்களுக் கின்னமுதாய் மருவச் சொற்றான், கேள்வியினு லுயர்வீர பத்ரகவிச் சரபமெனக் கிளத்து வோனே.

## சிவகெங்கை இராமாயணப்பிரசங்கம்
## அரு முத்துக்கிர்ஷ்ணபிள்ளை யவர்கள் மாணாக்கரும்
## ஷையூர் சவுளிக்கடை
## வெள்ளைச்சாமிசேருவைகாரருமான
## பெரியசாமிசேருவைகாரரவர்களாலியற்றியது

குறவஞ்சி யொதுங்குந் தூய சுனைதொடர் புனத்தின் வள்ளிக், குறவஞ்சி கொழுநன் குன்றக் குடியமர் குழகன்மீது குறவஞ்சி தறும்பூந் தாரோன் கறுவமு தென்னச் சொற்றான் குறவஞ்சி யதனைவீரபத்திரக் குரிசின் மாதோ,

## ஷையூர் சவுளிக்கடை ஆதிமூலம்பிள்ளை,
## அவர்கள் குமாரர்
## காத்தய்யாபிள்ளையவர்களியற்றியது

புறவஞ்சி யிட்டசனத் தனங்கை காந்தட்
பூவபாஞ் சியையொத்துப் பொலியு மேனிக்
குறவஞ்சிக் கொடிபடர்கொம் பாகும் குன்றக்
குடிவேண்மே லுவரியினைக் குடித்தோ னும்பா
ருறவஞ்சி மலையிறங்கா துறைவோ னாமென்
றுணருமிய லுறும்வீர பத்ரதீரன்
குறவஞ்சிப் பிரபந்த வமுதைத் தந்திக்
குவலயத்துப் புலவருண்ணக் கொடுத்திட்டானால்.

உ

கணபதி துணை.

# குன்றக்குடி சிவசுப்ரமணியக்கடவுள் பேரில்

# குறவஞ்சி.

## தோகையடி விநாயகர் காப்பு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூதலமெ லாம்புகழும் பூதரத்தி லுயர்சிகண்டிப் பொருப்பில் வாழு
நாதரெனுங் குமரகுரு பரன்மீதிற் குறவஞ்சி நவிலக் கங்கை
சீதமதி யரவிதழித் தொடையணியுஞ் செஞ்சடிலச் சிவனா ரீன்ற
காதலனார் தோகையடிக் கணபதிபங் கயமலர்த்தாள் காப்ப தாமே

## பரமசிவவணக்கம்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மேடமனு கிடபமுற்றோன் மிதுன பாணி
மிசைகடகம் பூண்டுசிங்க மீதார்கன்னி
யோடுதுலா நறையெனப்பல் லுயிர்க்கு மோங்கி
மயாளிவிருச்சிகந் துலக்கியுலவுந திங்கட்
சூடியைம்பூ வைக்கருப்புத் தனுசி லாரத்
தொடுமகரத் தனையெரித்தோன் றுணைத்தாள் போற்றி
கடுகும்ப முலைமீனக் கண்ணி வள்ளி
நாதர்குன்றைக் குறவஞ்சி நவில்கின் றேனே.

## நாமகள்வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புதியமல ரொழுகியதே னதிவழியாய்ப் பழனமதிற் புகுந்து செங்கெற்
கதிரின்முத்த மதியெனவுங் கதிமேம நாட்டுயர்சி கண்டி வெற்பின்
அதிபதியாங் குமரகுரு பரன்மீதிற் குறவஞ்சி யதனைச் சாற்ற
விதிதிருநா வுறைதருபா ரதிபதமென் னிதயமலர் மிசைவைப் பேனே,

## அவையடக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஓதியபன் னூலுணர்ந்தோ ருவகைபொங்கி
மழலையின்சொல் லுவந்துகேட்பா
ராதலினா லென்சொலையும் புன்சொலா
யினுமின்சொ லாமென் றோர்ந்து
கோதகற்றிக் குணம்பொருத்திக் கொள்ளுவர்தன்
னாரெனவுங் குறித்துப் பானு
சீதமதி சூழ்சிகண்டிச் செவ்வேளின்மேற்
குறவஞ்சி செப்பி னேனே.

# குன்றக்குடிக் குறவஞ்சி.

## தோடையம்.

இராகம் நாட்டை — ஜம்பைதாளம்.

1 தக்கிடதிக்கிடகிடதா=தகுர்ததியி=தகுர்தவென
மிக்கவுநடிக்குமயில்=வெற்பில்வருநீதர்
குக்குடக்கொடிக்குகன்மேற்-குறவஞ்சித்=தமிழ்க்கூறக்
கைக்கயமு=கக்கடவு=ளைக்கருது=வேனே. ஆ. ஆ. ஆ. ஆ.

2 தணததண-ஜெணுதஜெணு-தரிதஜெக-தரிதவெனப்
பணவரவின்-மிசைநடஞ்செய்-பச்சைமயி-லோன்-மேற்
குணமுலவு-செந்தமிழாற்-குறவஞ்சித்-தமிழ்க்கூறக்
கணபதிபின் னவனுபய-கழறுதிசெய்-வேனே. ஆ. ஆ.

3 அமணர்களைக்கழுமுனையிலுறையவருமிறையவன்மேற்
றமிழிசைக் குறவஞ்சி தழைக்கயான் சாற்றக்
கமுகையொத்த மிடறுடைய கன்னிசவுந்தரவல்லிதன்
னிமலர்தேனதியானை நிதந்துதிசெய் வேனே. ஆ. ஆ.

4 அண்டபகிரண்டமுகடதிரவுதிரவிசை
கொண்டிசைபுடைத்துநிதங் கூவுஞ்சேவலன்மேற்
றண்டமிழிற் குறவஞ்சி சாற்றமலைக் கொழுந்தரனும்
எண்டிசைவணங்குமிடும்பேசுவரனுந்துணையே. ஆ. ஆ.

## மங்களம்.

இராகம் சுதநாமக்கிரியை — ஆதிதாளம்.

மங்களமே ஜெய மங்களம் எங்கள்
மாயூரகிரியானுக்கு மங்களம்.

1 துங்கமலை நீதனுக்குச் சொற்றமிழ் விநோதனுக்குச்
செங்கமலப் பாதனுக்கு மங்களம் எங்கள்
சிகண்டிமலை நாதனுக்கு மங்களம்.

2 சத்துருசம் மாரனுக்குச் சங்கரிகு மாரனுக்குச்
சித்திரவில் தாரனுக்கு மங்களம் எங்கள்
சிகண்டிமலை வீரனுக்கு மங்களம்.

3 அன்பர்பா லுரியானுக்கு மசடர்பாற் றரியானுக்குத்
தென்பழநி புரியானுக்கு மங்களம் எங்கள்
சிகண்டிக் கிரியானுக்கு மங்களம்.

4 மருவுமனங்கலையானுக்கு வாய்த்தவெண் ணெண் கலையா(னுக்குச்
செருவில்வென்று மலையானுக்கு மங்களம் எங்கள்
சிகண்டிமலையானுக்கு மங்களம்.

## கட்டியக்காரன்வருகிற விருத்தம்.

ததிபளை யுண்டதாமோ தரன்றிரு மருகன் றண்டே
னதிபுடை சூழவாழு நற்சிகண் டிப்பொ ருப்பின்
பதியெனுங் குமரமூர்த்தி பவனியெச் சரிக்கைகூறக்
கதிசபை யதனிற் கட்டியக் காரனுந் தோன்றினனே.

இராகம் சௌராஷ்டிரம்—ரூபக தாளம்.

கண்ணிகள்.

1 மாமன் பூமன் காமனும்
வையகத்தோருந்துதி செய்யச்செங் கோல்பெறும்
மாமன் குமரமூர்த்தி
வாசற்கட்டியக்காரன் றோன்றினனே.
2 திட்டமாமுண் டாசுகட்டிச்
செங்கையிற் பிரம்புங்கொண் டதட்டிக்
கட்டமுக னனைகெட்டிக்
கட்டியக்காரனுந்தோன்றினனே.
3 மத்தகெஜம் போலேகிசி
வக்கணைப் பேச்சுக்கள் பேசி
கைத்தலவேத் திரம்வீசிக்
கட்டியக் காரனுந்தோன்றினனே.
4 வட்டப்பொட்டிட் டுக்குறுக்கில்
வரிந்து கச்சையிறுக்கிக்
கட்டியே மீசைமுறுக்கிக்
கட்டியக்காரனுந் தோன்றினனே.

MAHOPADHYAYA U.V.S. IYER LIBRARY BESANT NAGAR

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிறுமதலை யறுவரெனச் சரவணத்தில்
விளையாடித் திரியுங் காலை
விறலரிசோ தரியரனை வினவவுன்றன்
மதலையென விரும்பிக்கொங்கை
நறவினிய பாலருளி வளர்க்கவருங்
குமரமயினுகஞ்சுற்றித்
துறவிமை யவர்மனிதர் யாவருஞ்சூ
ழப்பவனி தோன்றினரே.

ஸ்ரீ சிவசுப்ரமண்யக்கடவுளார் மயின்மீதிலேறிப்

## பவனிவருகிற தரு

இராகம் உசேனி—சாப்பு தாளம்.

பல்லவி

பவனிவந்தனரே முருகையர்
பவனிவந்தனரே

அநுபல்லவி.

பவனிவந்தன ரவனியுந்தொழு
எவனமங்கையர் நவநடஞ்செய — பவனி

சரணங்கள்.

1 செஞ்சொல் வலவரும் விஞ்சையர்களொடு
கஞ்சன்முகிலுமிறைஞ்ச மயிலினில் — பவனி

2 தேவரும்புவி யாவருந்தொழ
மாவுறுஞ்சிகி மேவியன்பொடு — பவனி

3 பருவமங்கைய ரிருவருஞ்சொன
வுருவெனுங்கதி குருபரன்றிருப் — பவனி

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பிரணவமா கியபொருளை யையன் காதிற்
பேசுமயின் மலைமுருகர் பவனி கண்டு
கிரணதின கரர்கோடி தோற்ற மோவென்
கிளிமொழியார் பலருமயக் குற்று முத்தா
பரணமுலை பிடித்தணைகி லாரோ வென்னப்
பைந்தொடியார் கணத்தினதி ரூப மென்னுங்
கருணைபொழி வதனமோ கினிமிக் கான
காதல்கொடு ஜோதியில கவும் வந்தாளே.

தரு

இராகம் நாதநாமக்கிரியை—ரூபகதாளம்.

குமரகுரு பரன்முருக சரவணோற்பவவென்னுங்
கொண்டாடி யதிகமயல் கொண்டாடிப் பாடி
அமரருல கமருமின்போ லமருவியவிரதி
அதிரூப மோகமா தாகிவந் தாளே.

வேறு தரு

காம்போதி ராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

அதி ரூப மோகி னியும் வந்தாளே
அரிவையி ரதிமத னடியிணை தொழுதிடும் (அதிரூப)

அநுபல்லவி

கதியார் பணிகள் பூட்டி
நெற்றியிற்றிலகந்தீட்டி
மதிபோல்மு கக்கண் ணைட்டி
மயின்மலை முருகய்யனுயர்திருநாட்டில் (அதி)

### சரணங்கள்.

1 கொங் தார்மலர் குழலிற் சூடிக்
குளிர்நவ ரசமொழு கிய மிருது=மொழியுரைக்
குயில்போலினிய ராகம் கூடி
சந்தத கீதம்பாடிச் சரச மயில் போலாடிக்
கந்தி கண்டங்கண்ணுடி
கவுளென வளருமின் னிருதன கிரீடி (அதிரூப)

2 அன்னம் போலே யிலங்கும் நடையாள்
அழகது பெறுவளை நிகர்தரு மிருகன
மார்க்துவரி ரோர்விழிக்கடையாள்
பின்னுங் குழற்சடையாள்பிடிக்கு ளடங்கு மிடையாள்
வன்னத் துகிலுடையாள்
வடிவுள கதலியின் மலியிருதுடையாள் (அதிரூப)

3 தத்தை போலவு மொழி கொஞ்சி
சவுமிய குணநன் னய மிலகிய மதி யெழில்
சார்ந்துதேமல் படர்ந்த நெஞ்சி
சித்தச னுங்கண் டஞ்சித் தினமும் பணியு மஞ்சி
முத்துமோ கனவஞ்சி
முருகய்யர் தனைநித மருவமால் மிஞ்சி (அதிரூப)

### விருத்தம்,

அந்தர மின்னே நாலோ ஆரணா மோ மருங்க
திந்திர தனுவோ புரூர மெனவிளை ஞோர் மயங்கச்
சுந்தரச் சிகண்டி காகத் துரைமைய லுறுமின் னுட்குத்
தந்திர முரைக்கும் பிராண சகிவந்து தோன்றினளே.

### தரு

இராகம் மத்தியமாவதி—அடதாளம்.

### பல்லவி

சகிமாதுவந்தாள் உல்லாச
சகிமாதுவந்தாள்.

### அநுபல்லவி.

சகிமாதுவந்தனள் முகில்போலவே வளர்
சிகிநாகமேவிய குகன்வாழும் நாட்டில் சகிமாது

### சரணங்கள்.

1 மயிலோ விருவிழி அயிலோ மொழிசெழுங்
குயிலோ குழையிரு வெயிலோவென்றிலகிட (சகிமாது)

2 கடித்தே யனுராகம் படித்தே கனங்குழன்
முடித்தே மலர்ச்செண்டு கைப்பிடித்தேமகிழ்ந்துதற் (சகி)

3 புகழ்சேர் மயூரகன் னகரிதனின் மேவிய
குகன்வாழும் நாட்டில திகழ்ரூபமாகிய (சகிமாது)

## விருத்தம்.

வந்திடும் சகியை நோக்கி மலர்மடந் தையின் மிக்கான
சுந்தர நிறைந்து வாழுஞ் சுரதவி நோத மாது
கந்தவேள் பவனிகண்டு காமமயல் மிகவுங் கொண்டு
சிந்தையே மயங்கி யிந்தத் தேவரார் சொல்லென் பாளே.

## தரு.

இராகம் எதுகுலகாம்போதி—ஆதிதாளம்.

### பல்லவி.

இந்தா ஒரு மயின்மிசை வருகிறா—ரிவராரடிமானே.

### அநுபல்லவி.

செந்தா மரை மகளுயர் மயின்மலைச்
சேவல னேயென்று பாவலர் துதிசெய்ய (இந்தா)

### சரணங்கள்.

1 கருணை பொழி விழியுங் கண்டேமன
முருகுதே யதிமயல் பெருகுதே
அருகி லுறையுமிரு பருவ மங்கையருடன்
அதிக மதுரவுரை யிதமொடுபேசி (இந்தா)

2 தித்தித் திருக் குமர ரிதழுண்ண
மெத்தவு மனதாசை முற்றுதே
சித்தமிரங்கி யொரு முத்தந் தாராரோ வெனத்
தெகிட்டா மயலென் னெஞ்சிற் புகட்டி யிங்கிதமாக (இ)

3 சந்தன மொடு கந்த மணிந்தநி
விந்தைய தாகவணைந்திடவே
சிந்தையில்த் தயவுபொருந்தா ரோகுன்றைத்
தேசிக னெனப்புவி ராசருந் துதிசெய (இந்தா)

## விருத்தம்.

அவரவர் மனத பீஷ்டம் அருண்மயி னகத்தி லேவாழ்
பவரவர் பவனி கண்டன் பாகமோ கித்த பின்னுள்
நவரச வினிய சொற்பிரா ணசகியை வினவி வார
இவரெவ ரெனவுங் கேட்கு மேந்திழைக் கியம்பு வாளே.

தரு.

இராகம் தோடி — ரூபகதாளசாப்பு.

பல்லவி.

மானே யறி யாயோ சொல்லு வேனே இனி நானே.

அநுபல்லவி.

தேனே செறி மாநதி சூழ் குன்றைத்
தேசிக னென்றிந்தக் காசினி போற்றுதல் (மானே)

சரணங்கள்.

1 உருகன் பர்க ளுருகின் புரு
புருகன் செந்திரு மருக னென்றுநீ (மானே)
2 வேதன் பணிபாதன் குன்றை
நாதன் சிவகுரு நாத னென்றுநீ (மானே)
3 வையந் துதி செய்யுங் குமர
ரையன் பன்னிரு கைய னென்றுநீ (மானே)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

செனவிறைக்குந் தாளமொளிர் தண்பணையுந் தேனதியுஞ்
செழிக்க வோங்கிப்
புனலிறைக்கு முகிறவழு மயின்மலைவேளெனச்சகியும்
புகன்ற போதே
மினலிடைக்கொம் பனைமயங்கி மயன்மீறி யைங்கணையால்
விரைந்து சாடுங்
கனலிறைக்குங் கொடையாகிக்கனலிறைகுஞ்செழுமதியைக்
கதஞ்செய் வாளே.

தரு.

இராகம் பந்துவராளி — ஆதிதாளம்.

பல்லவி.

மதியாமலே இங்குவந்தாய் — வெண்ணிலாவே வந்து
மதிமோசம் போகாதே — வெண்ணிலாவே.

அநுபல்லவி.

கதிர்வே லணியுஞ்செங்கைக் கடவுள் சிகதிண்டிமலைக்
கந்த வேளைநான் னைந்தவேளை வெஞ்செய்வாய் (மதியா)

சரணங்கள்

1 கனலா மென்றனை வந்துசாடுறதுங் குதலைக்
கண்டவுடன்மலைவா போகிறதும்

புனலா கியவுனக் கென்னவீம் பிதுசும்மா
பூச்சிகாட்டி யாமுழு நீச்சுங் காட்டியிப் போது (மதியா)

2 திங்களா யுலகெங்கும் நிறைந்தாயே—யிப்போ
திங்கென்முன்னே ஞாயிறாக வந்தாயே
நங்கையர்க்கு முகமாகப் பொங்கமுற் றிலங்கியநின்
நன்மதி தன்னைமறந்து துன்மதியா கவிப் போது (மதி)

3 தரணிபன் போலமா தரைக் காய்ந்தாயே—காய்ந்தத்
தாமாய்க் களங்கமுற்றுத் தேய்ந்தாயே
சரவணோற் பவர்குன்றை முருகர் கனிவாய் முத்தந்
தந்தணைய வரும்போ தெந்தனை யென்செய் குவாய் (ம)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அலையிறைக்குங் கடல்சுவற வயில்விடுத்தோன் குன்றைமுரு
 கயன்மேல் மாலாய்ச்
சிலையிருக்கும் புருவமின்னாள் செழுமதியைச்சினந்துதென்றற்
 றேரைத் தூறிக்
கலைமுனிக்கு மிடமான தாலேயென் கனதனத்தைக்
 கருதி யுன்றன்
மலையமென்ன வருகிறையோ மலையமன்று போலெவனும்
 வகை சொல்வானோ.

தரு.

இராகம் தோடி—ஆதிதாளம்.

பல்லவி.

தென்றலேவந்துசீறுதே=யுன்=சேதிநானறியேனே.

அநுபல்லவி.

நன்று நன்று குன்றை—நாகக்குமாரெந்தன்
 நாதராய்வரி—லேதுசெய்குவாய் (தென்றலே)

சரணங்கள்.

1 அகத்தினிலி டில்லையென்று
 மகத்துவங் கொடுவந்தாய் தென்றலே.
தொகுத்துப் புவியோருந்தன்
 முகத்தைப் பார்த்துப்பார்த்துத்
தூத்தூவென்ன கீதந் துப்பும்பெற்று நாணுத(தென்ற)

2 காலே நீமதத் தாலேயென்முன்
 கடுகிவந்துவந்து முடுகாதே
யேலவேயெனதல்குற் கோலவரவுக்குன்னை
 இரையாக்கிடுவன்றென்
வரைவாய்க் குடிகொண்ட (தென்ற)

L5400



சுற்றிச்சுற்றிவந்து மெத்தச்சினந்து சீறித்
துடிக்காய்மோதுகிறதடுக்காமோ
வெற்றிமயிலிலேறு முத்தையனைக்கூடி
மேவும்வேளையில்வந்துலாவி விடாயாற்றுவாய் (தே)

விருத்தம்.

மாவுடனே பணியாரந் தருநெடுமால் மருகன்மயின்
மலையில் வாழுஞ்
சேவலன்மே லாசைகொண்ட மோகினிதென் றலைப்பழித்துத்
தேமா வென்றுஞ்
காவிலுறுங் குயிலேயுங் கயிலானின் னத்தொழிலாய்க்
கருதி வந்து
கூவியென்செய் வாய்பெரிய தனம்பொருத்த வேனையெனவுங்
கூறு வாளே.

தரு

இராகம் மோகனம்—ஆதிதாளம்.

பல்லவி.

குயிலே உனக்கிந்தக் கொடுமையேது செழுங்—குயிலே.

அநுபல்லவி.

மயிலாகிய குன்றத்தயிலானெனை மரு—வயிலே நீசெய்யும்
பயிலாவதென் செய்யுங் (குயிலே)

சரணங்கள்.

உன்னியுன் [illegible] கூவுங்குயிலே கூவி
யென்னபல [illegible] ங் கண்டாய் குயிலே
சின்னமாக்கினவன் றன்னுடமொழி கேட்டுச்
சினந்து கூவுகிறாயுன் கனந்தானென்னபோ (குயிலே)

கொடியதிடம் வளர்ந்த குயிலே—இந்தக்
கொடியபுத்தி கற்றாய் குயிலே
துடியாக நீவந்து பிடிவாதஞ் செய்யாதே
சொன்னேன் சொன்னேன் என்னுடன் பகையாதே (குயிலே)

மாமின் சிகண்டிமலைக் குயிலே—குமார
சாமியிதோ வருகிறார் குயிலே
தேமாமலரோடைந்து பூமாரிபொழி கன்னற்
சிந்தனை வெல்லுமென் சிந்தனை யறியாயோ (குயிலே)

### விருத்தம்.

*வாலையிலே சூர்தடிந்த சிகண்டிமலைக் குகன்மார்பில் வாழ்க தம்ப*
*மாலையிலே மாலைவைத்து மாலையிலே மதியாலே மதிமயங் குங்*
*காலையிலே யிரதமெனக் கடுகியுற்று வருமதனைக் கடுகி மங்கை*
*வேலையிலே வேலைவிட்ட வேள்வரிலென் செய்வையென விளம்பு*
*[வாளே*

### தரு.

*இராகம் சாவேரி—ஆதிதாளம்.*

### பல்லவி.

*மன்மதப்பயலே யென்வல்லமை அறியாயோ*
*வந்துநிலை நிற்பாயோ.*

### அநுபல்லவி.

*நன்மைதருஞ்சிகண்டி யின்மலைச்சிவகுரு*
*காதலரைச்சேர்ந்தா லேதுசெய்குவாய்போடா (மன்மத)*

### சரணங்கள்.

*விற்கரும் பானதென்றன் சொற்கரும் பைக்கண்டு*
*மிகவுந் தலைகுனியுமே—யென்றன்*
*நற்கண்சு ரும்பைக்கண்டுன் விற்கண் கருஞ்சுரும்பு*
*நாணுமென் பதைநெஞ்சிற் றேரு தெதிர்வந்தாயே (மன்மத)*

*குடையாகிய மதியென் சடைநாகங் கண்டுடலங்*
*குறைந்துமலைவா யோடுமே*
*கடுகி வருகின்றவுன் படைகளெல்லா மெனது*
*கணமாம் அல்லாது வேறேகுணமாம் படைகளுண்டோ (மன்மத)*

*கற்பலத் தேரேறி யார்ப்பரித் தோடிவந்தென்*
*கருத்தை யுருக்குகின்றாயே*
*பார்ப்போ மினிமேற்குன்றை வேற்பா னிங்கேவரிற்*
*பஞ்சபாணமீயுங் கெஞ்சவல்லவோ வேணும். (மன்மத)*

### விருத்தம்.

*ஞாயிறெனத் திங்களுறச் செவ்வாயம் புதனைத்த*
*னங்கண் றாவத்*
*தூயவியா ழங்கைதொடாள் வெள்ளித்தா லத்தினமு*
*தமுணாள் பெற்ற*
*தாயுமே சநிதமினாள் மயலானாளென்றுகுன்றைச்*
*சாமி பார்ச்சென்*
*றேயெனது நேயமெலாஞ் சொல்லெனமோ கினிசகிமுன்*
*விளம்பு வாளே*

## தரு.

இராகம் ஆனந்தபைரவி— ஆதிதாளம்.

### பல்லவி.

தூதுசென் றிப்போதென் சேதியைச்
சொல்வாயே சொல்லச் செல்வாயே

### அநுபல்லவி.

பூதலம் புகழ் நாதன் சிகண்டிமலைப்
புண்ணிய ரெனுஞ்சுப்பிர மண்ணியர் சமூகத்தில் (தூது)

### சரணங்கள்.

விண்மதி யாலெந்தன் பெண்மதி யானது
மெத்த மயங்குதென் முத்துத் துரையவர்
தண்மதி யானனங் கண்மதி யானனந்
தாலத்திற் பாலொடுவைத் தாலத்தினு ஞ்செல்லேனே (தூது)

பன்னீர் கொதித்திடும் வெந்நீ ராகுதே
பாகிலை யுமின்சொல்லாய்ப் பாகிலையு மருந்தேன்
பன்னீர் கரங்கொடவள் வெந்நீர் தடவிலைப்
பைந்தொடிக்கு மாரனம் பைந்தொடிக லில்லையென்று (தூது)

சங்கம லைகடல்மு ழங்கம லைவாகிவி
தனத்தழுந் துமென்னிரு தனத்தழுந் திச்சோரவே
செங்கம லைவளருந் துங்கம லையுயருஞ்
செவ்வேளைக் கண்டுஇவ் வேளைதருணமென்று (தூது)

### விருத்தம்.

கதிசுரபிக் குலங்களைத்திண் குவடெடுத்தங் கனந்தடுத்துக்
காக்குங் கோவும்
விதிசுரருந் துதிகுமரர்க் கிவையுரைத்தந் தார்கொணர்வை
மின்னே யென்றும்
மதிசுரத மோகினிசொற் படிசகிசென் றனள்பின்மயி
லசலத் தோங்குந்
துதிசுரசங் கிதநடனத் தொருகுறமின் வருவிறசுந்
தாஞ்சொல் வேனே.

### அகவல்.

சிலையென மேருச் சிலையினை வளைத்துங்
கலையெனப் புலியுரி கவின்றரைப் புனைந்.

# குன்றக்குடிக் குறவஞ்சி.

வெள்ளியங் கிரிமிசை மேவி யுமையுடன்
உள்ளியங் குவகை யொடுவீற் றிருக்குங்
காலையி னுமைதங் கனாவினைப் பணிந்தோர்
பாலக னினிது பாலித் துலகின்
முத்தொழி லியற்று முறையருள் செய்கென
சத்தியிற் பாதிதனை யொரு பாகம்
வைத்தொரு பங்கை மகவுரு வாக்கி
வீரிய புயபெல விசாகன் குகனெனப்
பேரிவை புனைந்திப் பெரும்புவ னங்கள்
சிருட்டி முதலவாஞ் செய்வினை யைந்துந்
தெருட்டி நடாத்தெனத் தென்கயி லாய
நகத்திடப் பாலோர் நல்லகந் தகிரி
யசர்த்துறைப் பெயரே யருளிவா கனமாய்
மயிலொன் றருளவும் வரமிவை பெற்றே
அயிலவ னினிதாங் கமர்ந்துல குயிர்த்தில்
யோககிர் வாக வசிதாய் மன்னுஞ்
சாகத் திவிற் றனியர சாளுந்
சூரன் முதலிய துணைவர் மூவருந்
தீரமாந் தவசு செய்திட வென்றே
காஞ்சி வனத்திற் கனதவம் புரியும்
வாஞ்சையை நோக்கிய வாறிது வெனவு
மாலு மயனு மயிலிடம் வழுத்தச்
சீலமார் குகனைச் சிகண்டியு மிறைஞ்சி
யென்னரும் பதவிக் கிடறுறு வாறு
நின்னருள் யான்பெற நீசெயென் றிரப்ப
நன்றென விரங்கி நாதன் கருணையாய்க்
குன்றன புயர்சூர்க் கொற்றவர் தம்மை
வரவழைத் தருகினில் வளர்பத மளித்திட
நிருபரு மக்கெறி நிலவுறு நாளையில்
அண்டவா பரணனவ் வாசரை நோக்கிக்
கொண்டன் மேனியனுங் குலவும்வே தாவுஞ்
சேந்தன் வாகனஞ் சேவற் கொடியென
வாந்தகை பெறவென வாசைமீக் கொண்டு
நீருணும் பதவியை நீக்கினு ரெனவுஞ்

கூரும் வெகுளிநெஞ் சுடையரா யுறுநாள்
அரியயன் கயிலைவா ழண்ணலை யிறைஞ்சியக்
கிரியினுர் குகன்மருங் கெய்திவி சாகன்
தேசிகங் கண்டு தெரிசனை புரிய
வாசலி னவரவர் வாகன நிறுத்திச்
சன்னிதி புகவுஞ் சமயமி தென்றே
யுன்னியே கபட வுபாயம தாக
அசுரர்கண் மயிலிடத் தன்னமுங் கருழனும்
புஜபெலம் பேசுதென் புகலச் சிகண்டியுஞ்
சினத்துட னெதிர்த்துச் செயகரு டனையும்
அனத்தையும் விழுங்கிய தறிந்துவி சாகன்
வெகுண்ட சுரன்றனை மேதினி யதனிற்
றகுமுன் பிறவியாய்த் தானமை யெனவிச்
சாபமீயக் தெழின்மயில் தன்னையும் வெகுண்டு
நீபடி மீதி னிலவிய பாண்டி
தேச மதனிலே செழித்தபன் னிரு
வாசமாந் தலங்களின் வளந்தரும் புத்தூர்
அடுத்த குணதிசை யார்த்தயோ சனையின்
அடுத்தடுத் தரசவா ரணியத் துளது
மீதுநா முறைகவோர் வெற்பென வாகுதி
போதியென் றுரைப்பவப் போதினிற் போந்தே
மாதுறந் தோன்றிய மயூரமா மலையான்
பாற்கட லமுதினும் பார்க்கவின் னமுதந்
தீர்க்கமாய் நிறையுந் தேனூ றுடையான்
பூந்தடங் குடையும் பூவையர் முகத்தின்
காந்தியை மதியெனக் கமலங்கள் குவிதரக்
கொங்கையை நாணிக் குவிந்து கொழுகுதென்
றங்கதை நகுதல்போ லாம்பலு மலர
அளியெலாம் வனிதைய ரானனங் களையே
களின்மென் றேமன நாடிவந் தார்ந்திட
நாசியைச் சம்பக நம்பகை யிதுவென
யோசனை யாய்வெருண் டோடியே பூங்கா
வடவியிற் புக்கியம் மலர்மேல் வீழ
மடலுறு மலர்த்தேன் வழிந்தநி னுடனே

மிருந்துவா னரங்கள் விசையுடன் குதிகொளத்
தகர்ந்திடுங் கனிகளிற் றங்கிய நறவு
நித்தமுங் கழனியி னிறைவுறப் பாய்ந்து
நித்திலங் கொழிக்கு நேமநன் னாடன்
நிலவுபன் மணிக ணிறைத்திழைத் திடுவா
னுலவுமாடங்களி னொளிபரப் புதலைக்
கதிரோன் கண்டிது மதியோ வெனவும்
மதியோன் கண்டிது கதிரோ வெனவும்
சோபிதமான சுவணவெற் போவெனக்
கோபுர முந்திகழ் குன்றைமா நகரான்
அஷ்டகெஜ மெட்டுநிலை விட்டுவீ றிட்டுவாய்
விட்டல றிடக்குமுறும் வெள்ளைவா ரணத்தான்
அணிகழ லடியி னாடஞ் சேடன்
மணிமுடி மிசைபுரி மாமயிற் பரியான்
தடப்பந் தார்முலைத் தையலார் மயல்கொளுங்
கடப்பந் தாருரங் கமழ்தர வணிந்தோன்
அகமதிற் கனிவுற் றடிதொழு மனத்தார்
செகமயக் கிருளைச் சிறையினா லடித்துக்
கனகுரற் கூவிக் கதிதரு ஞானத்
தினகரன் காட்டிய சேவற்ப தாகையான்
கொண்டலிடி யேறெனக் குமுறியே சதமகன்
அண்டமுஞ் செவிடிட அதிரும் முரசான்
நெஞ்சிற் சடாட்சர நினைந்துசற் றுந்தொழா
வஞ்சரைக் காலர்கை வசஞ்செயா ணைவினான்
தீதுசெய் சமணரைத் தென்மதுரை தன்னிலே
வாதினால் வென்றருள் மயூரகிரி நாதன்
உரைநற் றமிழ்க்கவிஞ னுக்குருகி வேலினால்
வரையைத் துளைத்திடு மயூரகிரிநாதன்
படிமீது பொங்கிவரு பரவையுஞ் சுவறவே
வடிவேலை யேவிய மயூரகிரி நாதன்
அழல்விழி தரும்பொறிக ளாறெனப் பொய்கையினின்
மழலைவடி வாகிய மயூரகிரி நாதன்
கலையினுயர் தமிழிலக் கணமுறைக் கவும் வழியை
மலையமுனி வர்க்கருண் மயூரகிரி நாதன்

மதிபருதி திசைமாறி வரினுமுறை வழுவாத
பதியரிச் சந்திரபூ பதியை நிகராகவுஞ்
சேடன்முடி கிடுகிடென் றாடவெழு தாகள்வான
மூடவுமி ரவிமாவு மோடவழி யிலதா
யுறத்தணத ணத்திமித தர்ச்செணுத செணுதசெணு
தத்திமிதித திமிதவென நிர்த்தமொடு வெற்றிகொடு
தாவியே யீரமொடு லாவியே சேனுலவு
வான்றருக் குலமவைக ளீன்றநற் கனிகள்பல
தான்றகர்த் ததனிலிழி தேன்றிரைப் புனல்களென
வுஞ்சொரிய மிஞ்சியே யஞ்சிலர்கள் கெஞ்சவே
தரியலார் மகுடமுடி தவிடுபொடி யாகவே
பரிநடாத் தியசெய பராக்கிரம சாலி
வங்கர் கலிங்கர் தெலுங்கினர் கொங்கணர்
மகதர்கள் குருதர்கள் புகழ்தரு செகதல
மன்னிய வரசருமின்னிய திறைசெய
மாபுரிசை சூழ்தரும் தாபுரியின் மேவியபிர
தாபமத ரூபகிரி தீபமென மேவிரபல
மிகுநமசி வாயமுகின் மகிவனவு மேன்மைபெறு
செகதலநா திபதி சுருர்தகுண சாலநிதி
மேதினியை யாளுமொரு வேண்முத்து விசையரகு
நாதக்க வுரிவல்ல வப்பெரிய வுடையார்வ
சிகரசு பாசரசு சிகாகு ணாகரன்
செங்கோல்பெ லுங்கனக சிம்மாச பனதிபுகழ்
மங்காம லுயர்முத்து வடுகநா தேந்திரனருள்
போசனென வருமெங்கள் போதகுரு சாமிமக
ராசனுக் கருள்புரிம யூரகிரி நாதன்
கல்வியறி வாகமக் கட்டழகி தானமும்
நல்வகைப் பயனைகிதம் நாடியமெஞ் ஞானமும்
தன்மமே ஜெயமென்று சார்ந்தசிங் தனையும்
நின்மலர்ப தாம்புய நினைக்கும்வந் தனையும்
புனிதமுங் கனமும் பொருந்தி யெஞ்ஞான்றும்
கனிதரு திருவண் ணமலை யாதின
சைவசித் தாந்தமா தவநிறைந் திலகுந்
தெய்வசி காமணித் தேசிகர் வரன்முறை

பெற்றமெஞ் ஞானசுப் பிரமணிய ரென்று
நற்றவ குருவைவெந் நாளும் பணிகுவோ
னங்கயற் கண்ணாட் கதிமோக நாதனென்
சங்கர னிதமுந் தழைக்குங் கூடலும்
யோகம் பிரியா ருளத்திற் குடிகொளும்
பாகம் பிரியாள் பதிமங்கை பாகரும்
மீனிற் பொலிவிழி மெல்லிய லென்னுந்
தேனிற் பொலிமொழி தேவுக்ர நாகருங்
கால வடுகக் கடவுளு மயிலார்
வேலணி யுங்கர வேளுமெந் நாளும்
நம்பிரா னென்னவிந் நானிலந் தொழுவளர்
தென்பிரான் மலையெனத் திகழ்சிவஸ் தலமும்
அவகாமி யந்தனை யகற்றிஞா னந்தருஞ்
சிவகாமி யம்பிகை திருத்தளிம கேசரும்
நயனா னுதல்வயி ரவமூர்த் தியுமுயர்
செயமிகு புதுவையுஞ் சிவதரும புரியும்
செங்கதிரை நிகர்வேல் சிறக்குங் கரத்தண்ணல்
துங்கமலை யுடனெழில் துலங்குசீ தளைச்சிவாழ்
தலமுடன் சிருலவு சதுர்வேத மங்கையெனு
மிலகுதல முடனே யிசைந்தவெழு தலமுமேன்
மேலுந் தழைத்திடவு மேன்மைபெறு மதிகார
சீலந் தரித்தருள் சிவஞான போதகன்
ஆழிசூ ழுலகின்மீ தார்குன்றை நகரினும்
ஊழிதொறு மழிவிலா தோங்குபுகழ் புண்யநிலை
நிற்கட்டு மென்றே நினைத்தல்செய் தெழில் குலவு
கற்கட்டுமடமுங் கவின்றரப் பிரதிட்டை
செய்சபா பதிமுனி மதிக்குமதி யூகியாய்
மெய்வசன விஸ்தார வேலாயு தேந்திரமக
ராசரிஷி தானுமெந் நாளுந் தழைத்தோங்கும்
வாசற்க விஞனென்ன வரிசைபெற் றுயர்மகிமை
நித்தமும் பெறுவாணி தாசனென வருவீர
பத்திரக் கவிஞன் பகர்ந்தகுற வஞ்சியின்
பாமாலை சூடியருள் பாலிக்கு நீதன்
மாமாலை யன்றெழு மயூரகிரி நாதன்

பணுவலைப் பாடிப் பரிவுட ளாடிக்
களமலர் சூடிக் கவிழ் கண்ணாடி
கக்கத் திடுக்கிய கனகுறக் கூடையுஞ்
சிக்கென மருங்கிற் சேர்த்த பட்டாடையுங்
கண்டார் கழலும் வண்டார் குழலுங்
கரும்பு ருவமுறு கரும்பு ருவமுங்
கரியின் மருப்பைப் பெரியபொ ருப்பைக்
கதிர்பொற் குடத்தை மதன்மகு டத்தைக்
கஞ்சநற் போதை வஞ்சகச் சூதைக்
கைத்தா ளத்தைக் கடிந் திடங் கொண்டு
பணைத்துத் தடித்துப் பருத்துக் கனத்துத்
துணைக்கச் சணைத்துச் சுவர்க்கமெனு நாமமதை
யேந்திய தனத்தி லிலங்குமுத் தாரமும்
மாந்தர்கள் தொடரும் வசனவிஸ் தாரமும்
ஆலிலை யெனவும மைந்தவு தரமுஞ்
சாலவே பவளந் தனைநிக ரதரமும்
அன்னமென் னடையும் அரம்பைநேர் துடையும்
பின்னலார் சடையும் பிறங்குதுகி லுடையுஞ்
செவியினிற் குழையுஞ் செங்கர வளையும்
நவமணி யிழையும் நன்முகக் களையுஞ்
சங்கிணை களமுஞ் சசிவகிர் குளமும்
அங்கச னுளமு மாசைகொள் வளமும்
நிதம்பப் பணமுங் நிறைசற் குணமுங்
கதம்ப மணமுங் கனகங் கணமுஞ்
சன்னையும் பயிலுஞ் சாற்றுரைக் குயிலும்
வன்னமெய் மயிலும் மனங்களிப் பொயிலும்
பாடகச் சரணமும் பானுவின் கிரணமும்
ஈடிலா பரணமும் வைரந்தக் காரணமுங்
கண்டுகுறி விண்டு காமனை வெகுண்டு
பண்டரு மிரண்டு பார்வைவரி வண்டு
காலிற் சிலம்பு கலகல கலெனப்
பாலத் திலகம் பளபள பளெனத்
தங்க வணிகள் தகதக தகெனக்
குங்கும கெந்தங் குமுகுமு குமெனச்

சேருசெங் கதிர்செக தரிசெக தரிபோன
லாகுகொண் டேயபி ராமத்துட னடுத்துச்
செயங்கதிர் குன்றைச் செவ்வேண் மயலால்
மயங்கிய வஞ்சி மனத்துய ராற்ற
வெயின்மலி பொன்னின் மேருவை நிகரும்
மயின்மலை வருகுற வஞ்சிவந் தனளே.

அகவல் முற்றிற்று.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பணங்காட்டி யாடரவக் கொடியவிட
மெனச்சீறிப் படமோ கூறிக்
கணங்காட்டிப் பொருகூரை வென்றகுன்றைக்
குகனுட்டிற் கனகக் கொங்கைக்
குணங்காட்டிக் குயில்போலுங் குரல்காட்டிக்
குரினேருங் குழலுங் காட்டி
மணங்காட்டி யிரதிக்கு மணங்காட்டிக்
குறவஞ்சி வருகின் றாளே.

தரு.

இராகம் கலியாணி—அடதாளசாப்பு

பல்லவி.

வஞ்சிவந்தாள் மலைக்குற வஞ்சிவந்தாள்

அநுபல்லவி.

அஞ்ச லெனத்தினஞ் செஞ்ச ரணைத்தொழு
மண்டர்க் கருளுஞ்சி கண்டிக் குமரய்யன்
ரஞ்சி தக்கன மிஞ்சு புகழெழில்
காட்டு சேமகன் னுட்டி லேகுற (வஞ்சி)

சரணங்கள்.

நத்து மிளைஞர்கள் நத்து மழகுள்ள
சித்திர முலையும்வி சித்திரமே
கத்தி லுயபள கத்தின் மலர்கண்
முடித்தி னிதொடு நடித்து வேடுவர் (வஞ்சி)

கண்ட தரமொடு கண்ட சாமது
கண்ட வர்கள் பிரமை கொண்டிடக்

கொண்டல் சிகரெழில் கொண்டு வளருசி
கண்டு யுயர்வே தண்டனைத்தொழும் (வஞ்சி)

கந்த முலவுசு கந்த வாடையி
னுந்து வீசுமு குந்தனார்
சந்த திய்யழுங்வ சந்த னணிமரு
டந்தனை கொருடந்து லங்கவும். (வஞ்சி)

வேறு தரு.

இராகம் ஏதகாமக்கிரியை —ஆதிதாளம்.

பல்லவி

வஞ்சியும் வந்தனளே—மலைக்குற
வஞ்சியும் வந்தனளே

அநுபல்லவி.

மஞ்சுலவுஞ்சிகண்டி மலைமுருகையனிதமிலங்கிய நாட்டில் (வஞ்சி)

சரணங்கள்.

கொங்கைக் குடங்களைசந்தாட மதுவையுண்டு
கொண்டை வரிவண்டுகள் பாட அழகைக்கண்டு
அங்கசன்பணிந்தோட அதிக மயலினோரு மதியினில் நீட (வஞ்சி)

அத்தர்கதம்பவாசனைகம்பூரி மின்னரையெல்லாம்
அம்மேயம்மேயென்றுபேசி
சித்தம்புகழுங்காசிவிரிவய ரிகையரி னாமக ராசி (வஞ்சி)

முல்லைமுகையைநகைவெல்லக் கந்தமுறைநான்
முகமேறுதிமம்போலவுமெல்ல நடைநடந்து
அல்லிமிகருநல்ல அரசுமின்னார்மனத் துள்ளகுறிசொல்ல (வஞ்)

விருத்தம்.

பெருகுறி வெண்ணையுண்ட பிரான்றிரு மருகனன்று
ளொருகிர வுஞ்சவெற் பையும் பொடி படுத்தும் வேலான்
முருகுறு கடம்பன் குன்றை முருகய்யன் புகழைப்பாடி
வருகுற வஞ்சிசெவ்வேள் வாசலின் வளஞ்சொல்வாளே.

தரு

இராகம் அசாவேரி—அடதாள சாப்பு.

பல்லவி.

வாசலிது வாசலிது வானவர்க்கு மேன்மைதரும் (வாசலிது)

அநுபல்லவி.

தேசுலவுஞ் சிகண்டிமலை செழிக்குஞ் செவ்வேண்முருகர்
நேசமுட னெந்நாளும் நிலவுமணி வாசலிது (வாசலிது)

சரணங்கள்.

பிரணவமந் திரப்பயனின் பெருமைதனை திருமலர்க்குக்
கருணையுட னுரைத்தருளுங் கடவுளுறை வாசலிது (வாசலிது)
முத்தமிழைத் தென்பொதிகை முனிக்குவரும் படியுபதே
சித்தருளுமெங்கள் குரு தேசிகனெந்நாளும்வாழ். (வாசலிது)
பாண்டவர்கள் பகைதடித்து பாராளச் செய்யவருள்
ஆண்டவன்சி கண்டிமலை ஆறுமுகன் வாசலிது (வாசலிது)

விருத்தம்.

மாதிவளா மோதிவரா மயின்மலைவா முயிற்கரன்மேல்
மயல்கொண் மின்று
ளோதிவளா மோதியதா ரெனமகிழ்ந்து கண்றுற்றி
யார்நீ பெண்ணே
சோதிவளா ராறுமுகத் தோன்றல்புகழ் சொற்றாயே
அலங்கு முன்றன்
சாதிவளம் யாதறிய நீதிவழு வாதபடி.
சாற்றென் றாளே.

வசனம்.

அகோவாராய்பெண்ணே நீயானல் மயூரகிரிவாசகருடைய பெருமையைக் கூறிவந்தாயே நீயோ தேவரம்பைபோலே யிருக்கிறாய் நீயார் உன்னுடைய சாதியென்ன நன்றாய்த் தெரியும்படி சொல்லுவாய் பெண்ணே.

ஆனலென்னுடையசாதிதெரியும்படியாய்ச் சொல்லுகிறேன் கேளடியம்மே

தரு ௫.

இராகம் முகாரி— ஆதிதாளம்.

பல்லவி.

சாதி யெங்கள்குறச் சாதி யேநல்ல சாதிமற்றதை விசாரி.

அநுபல்லவி

பாதிமதிநுதல் மாதொரு பாகன்றன்
பாலனெனுங் குன்றை வேலரைப்போற்றிய (சாதி)

(4564)

சரணங்கள்.

மறையவர் சாதியைப் பார்த்திடி லவர்
வாணியச் சாதியிற் சேர்க்கையாம்
இறைவர்கள் சாதியைப் பார்க்கிலார்க்குமே
லாதவச் சாதியென் றேற்றுவா ரம்மே (சாதி)

அடவுடன் காராளர் சாதி யஞ்சாலி
அறுத்தறுத் தடன்கட்டுஞ் சாதியாம்
படியிற்கோ வசியர்கள் சாதி தான்மெத்தப்
பட்டிக் குலமிகுத்த சாதியாம் அம்மே (சாதி)

தரணியில் வணிகர்தஞ் சாதி யாருக்குந்
தனங்காட்டி விலைபோகுஞ் சாதியாம்
திரமாக ஆராய்ந்து பார்த்தி டிற்சூத்
திரச்சாதி கடைப்பட்ட சாதி யாமம்மே (சாதி)

யெந்தன் சாதிக்கிணை யெந்தச் சாதியாகிலு
மீடென்று நீநினை யாதே யிவன்
மைந்தரெ னவேவந்த மாயூரகிரிச்சுப்பிர
மண்ணியர்க் குரிமையுடன் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும் (சா)

விருத்தம்.

போரினிற் கதிரொளித்த புசபெலன் மருக னீபத்
தாரினைத் தரித்தோன் குன்றைச் சண்முகக் கடவுள் காட்டிற்
காரிய விதமாய்ச் சாதிக் கனமுரைத் தருளும் வேட
நாரியே யுங்கள் சாதி நடத்தையைச் சாற்றுவாயே

வசனம்.

அகோவாராய் குறமகளே உன்னுடைய சாதிவளங்கேட்டு மகாசந்தோஷமாச்சுது உன்சாதியினுடைய நடத்தையைச் சொல்வாய் குறமகளே.

ஆனாற்சொல்லுகிறேன் கேளடியம்மே.

தரு

இராகம் நாதநாமக்கிரியை—ஆதிதாளம்

கண்ணிகள்.

சாதிமுறைசொல்லச்சொல் லுமம்மே-யினிச்
சாற்றுறேன்சாற்றுறேன் கேளடி நீயம்மே (அம்மே)
ஆதியாந்தெய்வக்குறச் சாதியம்மே-வேறே
யார்க்கும்வாராதெங்கள் நீதியம்மே (அம்மே)

கூடைதெத்திக்குறம் படித்திடுவோ - மெங்குங்
குடியிருக்கக்குடி லடித்திடுவோம் (அம்மே)
சாடையிலேகொன்னிப் பேசிக்கொள்வோம் - மெங்கள்
சாத்திரத்திலார்க்குங் குறி பார்த்துவிள்வோம் (அம்மே)
கழுத்தச்செளத்தவெள்ளைத் திணைவிரைப்போம்—காக்கை
கழுகு தின்னும்வாடை யிழுக்குரைப்போம் (அம்மே)
குறத்திபுளிக்குடிக்கக் குறைவில்லையே - மருந்து
குடிக்கச்சொல்வோமடி கொம்பனையே (அம்மே)
பின்னொருசாதியிலும் பெண்ணெடுக்கோ - மெங்கள்
பெருமையறியாரிடத் துரைகொடுக்கோம் (அம்மே)
பின்னமெங்கள் முறைசொல்லி முடியாதே - குமர
ரேசர்மீதினிற்கொண்ட ஆசைமாதே

விருத்தம்.

ஒருமலைவு மனதிலுற வகரனடுங் கிச்சூத
வருவாபோசை
கருமலையும் பலமணியுங் கவிழ்பாவை யிடை முளைக்குஞ்
சரிதை கண்டு
செருமலையுஞ் சிகைகவே ணூட்டி லுன்சா திமுறைசொற்றுய்
தினம்கீ கண்டு
வருமலையின் பெருமையுநின் மலைவளமுங் குறமயிலே
வழுத்துவாயே.

வசனம்.

அகோவாராய் குறமகளே உன்னுடைய சாதிகடத்தை கேட்டு மகாசந்தோஷமாச்சுது நீயறிந்தமலையும் அதினுடைய வளங்களையுஞ் சொல்லிக்கொண்டு வருவாய்குறமகளே.

ஆனால்சொல்லுகிறேன் கேளடியம்மே.

மலை வளப்பம்.

தரு.

இராகம் கேதாரகௌளம் ரூபகதாள சாப்பு.

பல்லவி.

எந்தன் மலைக் கிணைசொல்மலை—எந்தமலை யம்மே

அநுபல்லவி.

மந்திரச டாட்சரசி வாநந்த பரிபூர்ண
சுந்தரச்சி கண்டிமலைச் சுப்பிரமண்ணிய சுவாமிவளர் (எந்த)

சரணங்கள்

திகாரமியம்பலந்தசெய் கனகமலை யம்மே—ஒரு
தென்னன்சென்று முலிடக்கச் சிதறுமலை யம்மே
கனகநிதி நெய்கயிலா யகமலை யம்மே அது
காரணமாங் கொந்தமதிக் காரன்மலை யம்மே—யம்மே (எந்த)

அருணகிரி யெனுநாமகிரணமலை யம்மே-அது
அனாமறி யாதமலை வாணமலை யம்மே
கருமுகிலா ருங்கடோரகிரிவளங்கே ளம்மே - அது
கவிமுனிக்கும் மணக்கோலங் காட்டுமலை யம்மே யம்மே (எந்த

இங்கிலத்தி லேபுராருப சவுரிமலை யாமே அதில்
எந்நாளுங் கோளர்குடி யிருக்குமலை யம்மே
வன்ன புளளா பன்னுதமிழ் வல்லமுனி வாழ்பொதிகை
மால்வரையை யெல்லாருங் கால்வரையெனவுரைப்பாரம்மே(எ

வாலமதி தனைக்குழந்தைக கோலமதிக் கயத்தனரு
மருப்பைநிக ராகுமென விருப்பமொடு சாடும
சீலமதி மானினங்கள் சாலமதித் தேரூர்ந்து
செழுமாலைத் தங்களுடை குலமானென நாடும் (எந்தன்)

அகத்துணிவைத் தவர்பவங்க ளகற்றுமலை யம்மே உயர்
அண்டர்முனி வோர்கள்துதி கொண்டமலை யம்மே
அகத்தியர்க்கு மகத்துவமிகும் அரியதமிழ் தெரியச் சொல்லும்
ஐயனெனும் தங்ககிரி அய்யன் முருகய்யன்வளர் (எந்தன்)

விருத்தம்.

அங்கக னவரைவாட்டு மசுரரை யயிலால் மாட்டும்
இங்கிதக் குகன்மாயூரத் தெழினமலை வளங்கள்கோட்டுக்
கொங்கைநீகவிலக்கேட்டுக் குளிர்ந்தனன் குறவர்வீட்டு
மங்கையே யுந்தனுட்டு வளஞ்சொல்லிக் காட்டுவாயே.

வசனம்.

அகோவாராய் குறமகளே உன்னுடைய நாட்டுவளஞ் சொல்லுவாய் குறமகளே.

தரு.

இராகம் மோகனம்—சாப்புதாளம்.

பல்லவி

எங்கள்சேமநாட்டுவளம்போ - லெங்குங்காணேனம்மே

அநுபல்லவி.

செங்கமலை மேவிவளர் துங்கமலை வேலருயர் (எங்கள்)

சரணங்கள்.

தோரெனவு மோதுவது மாகருட ஓதியைச்
சூதுபொரு மென்பதுப யோதரமடி யம்மே (எங்கள்)
முண்டகத்தை யண்டிபுற்ற வண்டரன்றி பேதுட்ட
மிண்டகத்தின் வண்டரில்லை விண்டலத்தினும் அம்மே (எ)
அரும்பொருளைக் கன்னமிட விரும்புவரல் லாலொருவர்
பெரும்பொருளைக் கன்னமிட விரும்புவரில் லையம்மே (எங்)
சேற்றுறுக வலையன்றி வேற்றொருக வலையில்லை
நாற்றிசையும் போற்றியதே நூற்றினெழி லேபுடைசூழ் (எ

விருத்தம்.

அமத்தியே வானோஞ்ச லாற்றிடும் பொருப்புத் தம்பாற்
சுமத்திய கையன்குன்றைச் சுப்பிரமண் யேசர்நாட்டிற்
சமத்துரைத் தனைநீகண்ட தலமுணர்ந் தலையெல்லாமோ
திமத்தியல் நடையாய்வேடச் சிறுமிநீ யியம்புவாயே

வசனம்.

அகோவாராய் குறமகளே உன்னுடைய நாட்டுவளங்கேட்டு மகாசந்தோஷமாச்சுது நீயறிந்துவந்த தெய்வஸ்தலங்களையெல்லாம் சொல்லுவாய் குறமகளே.

ஆனால்சொல்லுகிறேன் கேளடியம்மே

தரு

இராகம் பெலகிரி ரூபகசாப்பு தாளம்.

பல்லவி.

அறிந்த தெய்வஸ்தலங்க ளதனைக்கேளடி யம்மே நான் (அறி)

அநுபல்லவி.

சிறந்தபுகழ்சேர்குன்றை செவ்வேள்நாட்டம்மேநான் (அறி)

சரணங்கள்.

கனைதருபாணடியிற கதிக்குங்கூடற்பதியும்
புனிதமுலவுதிருப் புனல்வை குற்றாலமுடன் (அறிந்த)
நீடுபுகழாப்பனூ ரேடகந்திருநெல்வேலி
பாடல்பெறுராமீசம் ஆடானையுடனின்னம் (அறிந்த)

வரங்குன்றுதருள் திருப் பரங்குன்றமுஞ்சுளிகை
சரங்கொண்டகொன்றைவனத் திரங்கொண்டபுத்தூருடன்
யானைப்பவமகற்றுங் கானைப்பதியுடனே
கூனற்பிறையார்கொடுங் குன்றம்பூவணமுடன் (அறிந்த)
உத்தரகோசமங்கைத் தலமுமறிவேன்
உத்தரதேசத்திலு முள்ள தலங்களின்யான் (அறிந்த)
குருந்துறையரன்வாசப் பெருந்துறைப்பதியுடன்
திருத்துமாரூர்வேறு தில்லைசி காழியுடன் (அறிந்த)
இன்னந்தெய்வஸ்தலம நேகமறிவேனம்மே
சொன்னமயூரகிரியென் சொந்தஸ்தலம் அம்மே காண் (அ)

விருத்தம்.

மிஞ்சிய சமரிற்சூரை வென்றவன் மயினகத்தில்
ரஞ்சிதக் குமரமூர்த்தி நாட்டினிற் குறவர்மாதே
சஞ்சல மின்றித்தெய்வத் தலமுணர்ந் தவெலாஞ்சொற்றாய்
வஞ்சிநின் றலவிசேட மகிமையை வழுத்துவாயே.

வசனம்.

அகோவாராரய்பெண்ணேகுறமகளே. நீயறிந்ததெய்வஸ்தலங்களெல்லாங்கேட்டு மகாசந்தோஷமாச்சுது உன்னுடையதெய்வஸ்தலமகிமையை நன்றாய்ச்சொல்வாய்குறமகளே.

ஆனால்ச்சொல்லுகிறேன் கேளடியம்மே.

தரு.

இராகம் அடாணா—தாளம் ரூபக சாப்பு.

பல்லவி.

தலமகிமைசொல்லுறேன் கேளடியம்மே

அநுபல்லவி.

கலைமுனியும்பணியவரு கந்தவேளுகந்தகுன்றைத் (தல)

சரணங்கள்.

துட்டரவா நாடு கொட்டமடக்கியகந்த
சஷ்டியனுட்டித்தோரிடர் விட்டகலநீங்கும் (தலமகிமை)
நித்தமொருதரங்கிரியைச் சுற்றிவலஞ்செய்வோர்பவ
மத்தனையுமகற்றிப்பர முத்திவழிகாட்டும் (தலமகிமை)
மகாமதிப்பூசத்தில ரகரவெனுங்காவடிவ
ருகிறதும்பரிசுகள்வரும் பகாரமும்பொற்கிகரமுஞ்சூழ் (தலமகி)

சந்திரமுடன்மீனமதி உத்திரஉற்சவத்தில்வரும்
பத்தருளத்திருத்துகன சித்துவிளையாடும் (தலமகிமை)
விரமொடுகார் திறமயூரமிகுமால்வகிர்ந்த
திமநிலாடியவர் கோரவினைதீரும் (தலமகிமை)
அரசணிப்பெம் மானருளவரவணைத்தம்மையுமூவிரு
சிரவணலைத்தருமகிமைச் சரவணப்பொய்கையுஞ்சிறந்த (தல)
நாடியந்தத்தீர்த்தமதி லாடியவர்கோடிசென்ம
நிடியாகன்றும்விலகி யோடிநலஞ்சேரும் (தலமகிமை)
சகலபவமோசன சண்முகநதி வையாபுரியில்
அகமகிழ்ந்துமூழ்கினவர்க் கிகபரசாதகமுமெய்தும் (தலமகி)
கனத்தமயில்நகத்திலிருந் தனைத்தையுங்காத்தளிக்குமுரு
கனைத்தொழுதுமனத்திலென்றும் நினைத்தவையெலாங்கொடுக்
[கும் (தலமகிமை)

## விருத்தம்.

மின்னிய அயிலாற்சூரை வென்றவன் சிகண்டிவெற்பு
மன்னிய தலத்திலுள்ள மகத்துவ முரைத்தாய்கொஞ்சிக்
கொன்னிய மொழிகள்பேசுங் குறவர்தம் மரபிற்றோன்றும்
பன்னிநீ யறிந்தவித்தைப் பயனெல்லாமியம்புவாயே.

## வசனம்.

அகோவாரராய் குறமகளே உன்னுடைய தெய்வஸ்தலவிசே டங்கேட்டு மகாசந்தோஷமாச்சுது நீயறிந்த சாலவித்தைகளைச் சொல்லுவாய் குறமகளே.

## தரு

இராகம் மணிரெங்கு—ஆதிதாளம்.

## கண்ணிகள்.

சாலவித்தை மெத்தவுண்டு கேளடியம்மே—நல்ல
சாதகவித்தையும்ரச வாதமுண்டம்மேயம்மே
மூலிகைத்தொழிலிலெனைப் போலேயாரம்மே-அதை
மூதலிக்க வேவிளியென் சேதிபாரம்மே யம்மே
கொக்குச்சினை யிற்குயிலி ருக்கச்செய்கு வேனம்மே
குக்குடமும் வாரணமாகக்கறுவேன் ஒரு
கைக்குளேழு கடலைய டக்கச்செய்கு வேன் வெகு
காருடவித்தையுமுண்டு பாரடியம்மே யம்மே

வெங்கையுமிங் கேபணிசெய்து தாங்கிடச்செய்வேன் மரு
வெழுறுக்கும் பிராகவிக் காளெசெய்குவேனம்மே
பாய்ந்துடனெட் டுவரையுக் காய்குவேனம்மே அந்தப்
பச்சிலைமூ லிகைவெகு உச்சிதமம் மே யம்மே
ஆனையிட பமேறவு காணைசெய்குவே னம்மே
ஆமையிற்பா லுங்கறக்க லாமேயம்மம்மே யம்மே
வானபதி லேகமீள காளறிதவே ளுட்டும்
வஞ்சியர்கி ளைத்தகுறி யுஞ்சொலுவேனம்மே
சாந்தமாய்ம ழலைவக்கையிலெந்து வேணம்மே எனைத்
தப்பியவித்தையு முண்டோ ஒப்பியம்மே யம்மே
வேந்தர்புகழ் மயின்மலைச் சேந்தனூரம்மே யெற்கு
மிஞ்சிப்பசிக்கிது கொஞ்சங்க ஞ்சிவாரம்மே அம்மே

விருத்தம்.

தாதைவாய் புதைத்துயிர்ப்பத் தக்கமந் திரங்கன்னத்தி
லோதையன் குன்றைவேலர்க் குரியநாட் டினிலே வித்தை
யாதையுந் தெரிந்துவேட ரகத்தினிற் றுலங்குந் தெய்வக்
கோதையே யெனதுநெஞ்சக் குறிப்பறிந் துரைசெய்வாயே

வசனம்.

அகோவாராய் குறமகளே நீயறிந்தசித்துவித்தைகளை யெல்லாங் கேட்டு மகாசந்தோஷமாச்சுது என்மனதிலே நினைந் திருக்கிற குறியைச் சொல்லுவாய் குறமகளே.

ஆனாற்சொல்லுகிறேன் கேளடியம்மே

தரு.

இராகம் கண்டா—ஆதிதாளம்.

கண்ணிகள்.

சாந்துபன் னீர்கலந்து புலுகு—கொண்டு
தரையிற்ச திரமாக மெழுகு
வாய்ந்த சித்திரமாய்க் கோலமிலுகு=மரு
மலர்ப்பந்தற் சோடினையாய்க் கொழுகு
செங்கரும் பாலெங்கணு நிரைத்துக்=குளிர்
செவ்வாழைத் தோகைகளை நிறுத்து அம்மே
தொங்கியகுஞ் சம்போலேமாங் கொத்துக்=கொண்டு
தோரணங் கட்டியலங் கரித்து அம்மே

பிள்ளையாரொன் றுமஞ்சளினாலே=நீதான்
பிடித்துமெ ழுகினதின் மேலே
மெள்ளவும்வைத் திடதற்கு மேலே=மலர்
வேண்டுமெருச் சனைக்கொருக் காலேஇன்னஞ்
சொல்லுறேன்கே ளம்மேபணி யாரம்=வடை
தோசைமுத லாயபல காரம் அம்மே
வெல்லம்அவற் கடலைசிங் காரம்=அதை
யிண்ணேகொண்டு வந்திடுப சாரம் அம்மே
பச்சரிசி யிற்கல்லாஞ்சு பார்த்து=குறுணி
பதக்கெள்ளுப் பொரித்தொக்கச் சேர்த்து
இச்சையாய்வெல் லப்பாகத்தில் வார்த்துத்=தேங்கா
யிளையுடைத் துத்தோடறப் பேர்த்து அம்மே
பொடிப்பொடி யாய்நறுக்கிக் கொட்டு=அவற்
பொரியுங்கொண் டுவாரெண்டு தட்டு
வடக்குவாய்ச்செல் லிக்கும்பொங்கலிட்டுக்=குடத்தில்
மதுவும்வைத் துக்குட்டியும் வெட்டு
கிரைநாளி மீதுவிளக்கேற்றிப்=பசுவின்
னெய்யைவிட்டுக் கொண்டுவந்தால் நேத்தி
குறைவில்லா மலேயென்றன் சாத்தி=ரத்தின்
குறியையறி யலாம் பிரார்த்தி
தாம்பூலந்தக்கணை சாம்பிராணி=யொரு
தாம்பூரத் தகடொன்று பாணி
மேம்புலத் துறுயிந்தி ராணி=கூட
மெச்சுமென் குறிதான்வெகு திராணி
இத்தனையுங் குறையாமல்ச் செய்யே=உந்தன்
இதையத்தி னிலுறுதி வையே அம்மே
உத்தமியே யுந்தனிரு கையே=மன
துள்ளகுறி யெல்லாஞ்சொல்லு மெய்யே

விருத்தம்.

தடவுட னிருதராவி தனைத்திருக் கரத்தின்மேவும்
திடவுடன் பிடியாற்ருக்கிச் சிகண்டிசே வலுமாய்க்கொண்ட
கடவுடன் குன்றைவேடக் கன்னிநீ சொன்னதெல்லாம்
அடவுடன் கொணர்ந்தேனெந்தன் அகத்துறுங்குறிசொல்வாயே

## வசனம்.

அகோவாராய் குறமகளே நீசொன்னபிரகாரமே சகல பதார்த்தமுங் கொண்டுவந்து வைத்திருக்கிறேன் இனிமேலாவது என்மனதிலே நினைத்திருக்கிற குறியைச் சொல்வாய் குறமகளே.

ஆனாற்சொல்லுகிறேன் கேளடியம்மே.

## அகவல்.

சிவனருள் சுதனே திரிவித மதனே
நவமது ரிதனே நளினபொற் பதனே
திருமரு மகனே திரியம் பகனே
சுருபிப முகனே கவுரிதன் மகனே
தெருளுறை மனத்தினிற் சிறந்ததா ரகனே
அருளுறை தோகை யடிவிநா யகனே
அரின்மலை யெனுமுர வசுரர்மேல் விடுத்த
மயின்மலை யினனெனும் வானவர் தொழுவுங்
கடாட்சமீயந் தன்பர் கிளைத்தினம் புரக்குஞ்
சடாட்சரப் பொருளாஞ் சரவணோற் பவனே
ஆரணப் பொருள்விசா லாட்சிபங் கினராங்
காரணப் பொருளெனுங் காசிவிசு வேசனே
சவுந்தர வல்லிகித் தந்தய வொடுமரு
வுந்தர ணியில்வரு மதுநதி யீசனே
சிதரன் சோதரி சிவகாம வல்லிகன்
மாதொரு பாகனென் மலைக்கொழுந் தீசனே
கூளிவே தாளியங் கூர்த்த சூலாயுதக்
காளியெனும் வீரமா காளியங் காளியே
கொட்டமிடு துட்டக் கொடும்பேய்கள் தெண்ட
னிட்டிடு மலர்த்தா ளிடும்பே சுரனே
மாதவ னரனருள் மகவெனத் தோன்றும்
ஆதன மழகிய ரெனுமய்ய னாரே
முக்கியமிகு செஞ்சடா முனியாண்டி யப்பா
உக்கிரமொடு தாணியடி யுறையுங் கறுப்பா
கவுரிச கோதரன் கண்மணி யெனவும்
புவிபுகழ் வேந்தப் புலிக்கறுப் பய்யா

சந்திவீ ரப்பா சமையக் கறுப்பா
ர சத்தமா தாக்களே
துர்க்கைசா முண்டி சுதினகாமுண்டி
உக்கிரமா காளி ஓங்கார சத்தி
பொம்மகா தேவி பூமிகா தேவி
ஙம்மகர தேவி நாடகாதேவி
அஞ்சனை தேவி அனுமந்த ராயா
ரஞ்சிதா கோபி ரணவீர பத்திரா
உங்கடம் பாதம் உளத்தில்நான் மறவேன்
மங்கைதன் குறியை வகுத்துரைப் பீரே.

விருத்தம்.

சொலுக்குறு தியராங்குன்றைச் சுப்பிர மணியர்நாட்டிற்
கலுக்குறு வளைக்கையாய்நின் காரியம் செயம்செயம்பார்
சிலுக்குறு மயிற்கூச்சிட்டென்றேகத்தை யெல்லாம்போட்டுக்
குலுக்குறு தெய்வம்வந்துன் குறியெல்லாம் கூறுதம்மே

வசனம்.

ஆனால்ச்சொல்லுறேனடியம்மே.

நீ நினைச்சு வச்சகுறி யெக்குநல்லாய்த் தோணுறு நல்லாய்த்தோணுறு என்குறி முகத்துத்தெய்வமும் நல்லாய்வந்து முனிக்குறு உச்சுச்சூ உச்சுச்சூ அம்மே அம்மே அம்மே கேளலறியம்மே.

தரு.

இராகம் கேதாரகௌளம் — ஆதிதாளம்

கண்ணிகள்.

நீ நினைச்சுவைச்சகுறிதோணுது அம்மே
நேமித்தகாரியமெல்லாந் தாமிதமில்லாதே யிங்கே
நிமிஷத்திலேவரக்காணுது அம்மே
யாணினிச்சொல்லுறேன் கேளடியம்மே உந்தன்
அதிஷ்டமேயதிஷ்டம்பின்னார்க்குமுனைப்போலுண்டோ
அவனியின் மாதரிற் செம்மையம்மே
இச்சுக்கிச்செங்குதேபல்லியேது யிதின்
கிழக்கேயிருந்தொருபேய்வழக்குஞ்சொல்லிக்கொண்டிதோ
கிட்டக்கிட்டவருகுதிப்போதுசீச்சீ
அச்சமில்லையதினாலேமாதே எந்தன்

அரியமனஞ்சோதிக்கவருதுவந்தால்வரட்டும்
அதிலுலென்னபோவென்றெண்ணாதே
செல்லக்கைவளையள்பார்க்கநீட்டம்மேயுந்தன்
செங்கையிற்கொண்டவரைபோல்மங்கையரிற்கண்டதில்லை
செயஸ்தம்பம் நீயினி நாட்டம்மே அம்மே
வெல்லப் பிள்ளையாரைத்துதி செய்யம்மே நீதான்
விரும்புங்காரியமெல்லாம் வரும்படியானவகை
மிச்சமாய்ச்சொல்லுதேயுந்தன்கையம்மே அம்மே
சங்குசக்கரரேகைதங்கம்மே இது
தனரேகையுடனேயிற் பணரேகைகண்டரேகை
தங்கும்புருடரேகை பொங்கம்மே
இங்குன்கவலையைநீ தீரம்மே நிதம்
எங்கள்குல தெய்வமெனுந்துங்கமலைவேலருனை
இப்போதேயணையவருவாரம்மே
சந்தேகமில்லையினிப்பாரம்மே யெந்தன்
சாத்திரத்தினைத்தியையிம்மாத்திரைப்போதிலறியென்
சந்ததிக்குங்கொஞ்சங்குறிவாரம்மே
மைந்தனுச்சிக்கெண்ணையருள்வாயம்மே கொஞ்சம்
வாய்க்குப்பாதிச்சருகுபாக்குப்புகலைக்காம்பும்
வக்கணையாயெக்கித்தினித்தாயம்மே

வசனம்.

அகோவாராய்அம்மே உன்னுடைய முகக்குறி கைக்குறி மெய்க்குறியும் பார்க்கிற போதேநீநினைச்சகுறி யெக்குத்தானே தோணிப்போச்சுநீநினைச்சபடிக்குஉன்னுடையஆசைநாயகராகிய மயூரகிரிச் சுப்பிரமணியக்கடவுளார் உன்னைக்கூடியணையவேண்டிக் கிருபைகூர்ந்து சோபனவார்த்தையும் மணமாலிகையும் இதோவருகுது சுகமேவாழ்ந்து கொண்டிரடியம்மே.

விருத்தம்.

மனதினிலன் பொடுநினைத்த படிமருவ
மயின்மலைவேள் வருவா ரென்றே
தனமொடுதெய் வக்குறமின் புகன்றகுறி
நிலவரமாஞ் சாட்சி யாகக்
கனதையுடன் றூதுசென்ற சகிமாதுங்
• கடப்பமலர்த் தாரைக் கொண்டு

வனிதையெனும் அதிரூப மோகினிமுன்
வந்தினிது வழுத்துவாளே.

## தரு.

இராகம் ஆனந்தபைரவி—ஆதி தாளம்.

### கண்ணிகள்.

மாதேசின் னுரையின்வழி யாதேசியான்சென்ற
வகைவிபா ரியாவையுமு வகையுடன் சொல்லுவேனே
மாதேவ தேவர்மயின் மீதேறிப் பவனிவர
மையல்கீ கொண்டதுவுங் கைவல்லியங் கண்டேனே
சுபசோப னங்கொண்டு வருகிறேனியுமுத்துத்
துரைச்சியென்று சொல்வதற்குக் குறைச்சலுமுண் டாமோ
உபதேச குருவாகித் தாதைதனைப் பணிவித்த
உம்பர்பெரு மான்சன்னிதிச் சம்பிரமங்கள் கேளாய்
சீதரன் போலவளர் சிம்மாசனாதிபதி
தென்குழக் தாபுரி செழிக்கவரு நீதன்
பூதலம் புரக்குமெங்கள் போதகுரு சாமியெனும்
பூபதிசெங் கோல்நிதமும் பொங்குமுட னோங்க
ஆதிகொடுங்கிரிமுதல் ஆறுதல மூங்கூடல்
அங்கயற் கண்ணிசொக்க லிங்கருடன் வாழும்
ஊதியமதாகிய விழாபூசைக் கட்டளை
உயர்பிரம னாரும்வள மோங்கிடவெந் நாளும்
சைவசித் தாந்தவே தாகமம்வ ழாதுசிவ
சமயபரி பாலன்கிரு பாலகுண சீலன்
தெய்வசிகா மணியென்னுந் திருவண்ணமலையாதீன
தேசிக னுரைக்குமுப தேசவகை யாலும்
பரதேசி முத்திரையகு தார்விசா ரணைபெறுசு
பாஷிதசு சீலன்வே லாயுத யோகி
திரமா யியற்றுமுய ரதிகார சட்டங்கள்
செயும்படி நடாத்துமுத்தி யோகர்நெறி யாலும்
காலகா லங்களபி ஷேகநை வேத்தியமொடு
கட்டளை வழாதியற்றக் கதிக்குஞ்சன்னி தானம்
மாலயன் முதலினோர் வந்துநிதந்தொழுதேத்த
வரம்வேண்டு வனவருள் மகாசன்னி தானம்
தென்கோடி யாதிபதி தொண்டைமா னார்செயுமுச்

சிக்காலக் கட்டளை சிறக்குஞ்சன்னி தானம்
ன்காமமே நெருப்பெழுந் திருப்புனல்வை முதன்மைபர்சே
ருபதிக் குருபணிவிடை தாபசன்னி தானம்
பார்த்திகைக்குக் கார்த்திகைபி ரார்த்தனைசெய் வோர்கிளைக்
குருக்கின்வழி பருப்புரியுங் கருத்தன்சன்னி தானம் [குன்
றேர்த்திகரமென்மேலு முக்கியமுடனுண்டாக
த்தியபடியார்க்கருள்சண் முகவர்சன்னி தானம்
ன்னிதியின் மையைப்போக மென்னசொல்வேனினிய
மைதயலே கேட்டுச்சலிப்படிமானே
என்னுடைய மனம்போலு மன்னவர்க்கு மிருந்தமனை
யுமின்ப வாசமும் விலாசமுங்கண்டேனே
கண்டுசமை யம்பார்த்துக் கொண்டு நின்னெழில்சொல்வேன்
கருத்தறிந்து முகநோக்கிக் கருணையுட னேரே
வண்டுமொது வுன்டுமயல் கொண்டுளருந் தண்கடப்ப
மாலைதந் தாருனைப்போல் மாலையுங்கொண் டாரே

வசனம்.

அகோவாராய் வசந்தமோகினிப்பெண்ணே ஸ்ரீ மயூரகிரி வாசகராகிய சரவணோற்பவர், சண்முகர், கார்த்திகேயர், கங்கை புத்திரரென்னுந், சுப்பிரமண்ணியக்கடவுளார் உன்பேரிற் பரி பூரணகிருபையாய் உன்னுடன் கூடிவிளையாட வருகிறோமென்று திருவுளம் பற்றியருளிக் கடப்பமாலிகையுந் தந்தார் வாங்கிவந் தேனென்றேன் இந்தா வாங்கிச் சிரசின்பேரில் தரித்துக்கொள்ளுவாய் பெண்ணே.

மகாபாக்கியம் அப்படியேவாங்கித் தரித்துக்கொள்ளுகிறேனடிசகியே.

விருத்தம்.

இவ்விதஞ் சகிமின்கூறி யீயுந்தனன் கடப்பந்தாரைச்
செவ்விதா மோகினிப்பெண் சிந்தையின் மகிழ்ச்சிபொங்க
வவ்வியே கண்ணிற்சாத்தி மார்புறப் புல்லிவேட
மைவிழி வசந்திக்கான வரிசைகள் செய்கின்றாளே

தரு.

இராகம் பந்துவராளி—அடதாள சாப்பு.

கண்ணிகள்.

தாதுசென்றசகியின்றாள்=வந்து

சபைசோபனவசனஞ்சொன்னாள்
காதினிலவ்வுரைகொண்டுமுன்னாள்-தவஞ்
கைமேற்பலிதமானதென்றிருந்தாள்
என்றுமனதிலின்பங்கொண்டாள்=சகி
வன்றுயிர்த்துணையாமெனவிண்டாள்
மன்றமார்கடப்பந்தார்கைக்கொண்டாள்—சிரங்
வைத்துமடிக்குத்தனலம்மொழிக்கண்டாள்
முந்துமவர்களைச்சருகைச்சேலை-ரத்ன
மூக்குத்தியுமோகனம
அம்பரகடகமுந்தங்கமோலை=முத்த
ஆபரணங்களுமன்பாலே
நிறையுடனேபுவிப்பவே=சொல்லச்
செய்தனுப்பினள்கனசீரே
குறவினையினியின்புநேரே=குன்றைக்
குன்றமங்கையைவந்தணைந்தாரே

விருத்தம்.

மைகண்மாதரசைத்தனதுறை வள்ளல்வந்தணைந்துநாளு
மிக்கமா மகிழ்ச்சியாக வீசன்றிர வனஞ்சேர்நாட்டிற்
பட்சிகள் பிடிக்குமாறு பருவமே பிரியங்கொண்டு
மெய்கெனவே வேட்டையாடச் சிங்கனுந் தோன்றினானே

சிங்கன் வருகிற தரு

இராகம் பந்துவராளி—ரூபகதாளச் சாப்பு.

பல்லவி.

சிங்கன் வந்தானே—கெடிக்குறச்—சிங்கன் வந்தானே

அநுபல்லவி.

சிங்கன் வந்தானே துங்கமலைமேவு
திங்கிரிவேலவனிலங்குநாட்டிற்குறச் (சிங்கன்)

சரணங்கள்.

கச்சைதங்கக்குறுங்கினிற்சல்லடத்திறுக்கி
அச்சாமறைதுங்கிமெச்சிரிகைமுறுக்கி (சிங்கன்)
கொண்டைக்குறுகாய்க்கொட்டிக் கெண்டையுறுமாற்கட்டிச்
சொண்டிபேசிப்பகட்டிக் கொண்டவையையதட்டிச் (சிங்க)

சிக்குவலையடித்துப் பக்கித்திரள்பிடித்தி
டக்கள்ளினைக்குடித்து வக்கணைக[illegible] (சிங்கன்)
சுராருலகைமதிக்கும் அரசவனங்கிரி[illegible]
உரியகுன்றைப்பதிக்கு மரைசிகத்[illegible] (சிங்கன்)

விருத்தம்.

துதித்திடு மன்பர்நெஞ்சிற் றுலங்கிய தீபமாகக்
கதித்திடு மயூரவெற்புக் கங்கையன் வளருநாட்டில்
மதித்திடுஞ் சிங்கனுக்கே வற்றெழில் புரிக்குறப்பாடிக்
குதித்துள்ளி நடக்கொய்யாரக் குறப்பயல்தோன்றினனே.

இராகம் சௌராஷ்டகம்—ஆதிதாளம்.

கண்ணிகள்.

(1) சிட்டுத்தட்டுச்சேவற்கூடுங் கையிற்கொண்டு
சிக்கெனக்கொக்குப்பிடிக்கமுக்கூடும்
வட்டமிட்டகண்ணிக்காடுங் கொண்டுசிங்கன்
வங்கணக்குறப்பயல் வந்தனனே.

(2) பதுங்கிஒதுங்கிக்கிடந்து மெள்ளவுன்னிப்
பாயும்புலிபோலெட்டிப்பாய்ந்துநடந்து
மதங்கொள் சிங்கனைத்தொடர்ந்து சொற்படிகேள்க்குறும்
வங்கணக்குறப்பயல் வந்தனனே

(3) பனுக்கிச்சினுக்கிப்பேசிக் காட்டினரிலுள்ள
பக்கிவரவுஞ்சன்னை யொக்கக்கிசி
வணக்கண்ணிவலைவீசி வேட்டைகளாட
வங்கணக்குறப்பயல் வந்தனனே.

(4) தந்தனச்சங்கிதம்பாடி மயின்மலைச்
சண்முகக்கடவுளரைக் கொண்டாடி
மந்திரத்திலதிமோடிச் சிங்கனுக்கேற்ற
வங்கணக்குறப்பயல் வந்தனனே

விருத்தம்.

சிகிதனை மலையாய்ச்செய்து சிறக்குந்தே [illegible]
சுகிதனக் குதவுநாணுய்த் [illegible]
சகிதமாய்ச்சிங்கன்வார்த்தை தவறிடா [illegible]
விகிதமாய் வரவும்வேட் [illegible]னே.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

## தரு.

இராகம் கண்டை—ஆதிதாளம்.

பல்லவி.

பக்ஷிவருகுதய்யே—கனமோடு—பக்ஷிவருகுதய்யே.

அநுபல்லவி.

தக்கபுகழ்சேரு மிக்கமயூரகி
ரிக்குமரேசர்த ழைக்கும்மேமநாட்டிற் (பக்ஷி)

சரணங்கள்.

கொக்குத்திரள்வெருவாய்த் திரளொடொரு
மிக்கச்சென்றுவிருவாய்ப் பரந்திதோ
பொக்கணமேவநடு வுக்கோட்டைநிறையூ
ருக்குளத்தண்ணீரில் முக்குளித்துக்கண (பக்ஷி)

நாற்றிசையுமோடி யிரைதரு
நீர்த்தடங்கள்தேடிப் பரந்தெழில்
ஆத்தங்குடிவயற் சேற்றில் நடுஞ்சம்பா
நாற்றினெடுங்கயல் பார்த்துமகிழ்ந்தின்னம் (பக்ஷி)

மண்டிஓருக்காலே அங்கங்குதி
ரண்டுகடற்போலே சாலிவயல்
அண்டையிலும்உய்யக் கொண்டான்றிருவயல்
கண்டவயலிலுங் கெண்டைகளைத்தேடி (பக்ஷி)

கட்டழகன்தொண்டமான் உச்சிக்காலக்
கட்டளைக்குத்தினந்தான் அவன்
திட்டஞ்செய்மஞ்சளிப் பட்டிஅரண்மனைப்
பட்டிவயலிலுங் கிட்டியிதோவெகு (பக்ஷி)

## வேறு தரு.

இராகம் புன்னாகவராளி—ஆதிதாளம்.

பல்லவி.

பக்ஷிமேயுதய்யே பாரய்யே—மெய்யே—பக்ஷிமேயுதய்யே

அநுபல்லவி.

தொக்கிலே வேட்டைக்காரிகள்
மொக்கலர் மொக்கலாமிதோ (பக்ஷி)

சரணங்கள்.

திக்கெங்கும்புகழ்சேர்குன் றைக்குடிக்கோயில்ப்பண்ணைச்
செய்க்குளுல விக்கயற்களைக்குதக்கி மொக்கிக்கக்கிப் (பக்)
பண்ணுலவியபிச்சைப் பண்ணைவெறியன்வயற்
கண்ணுலாவிய தண்ணிலேதொகை
யெண்ணிலாவகை திண்ணமீனிலே (பக்கி)
பாங்குலவியசிறு மாங்குடிவயலினி
லோங்கியதன் மீன்களையெல் லாங்கவரு மாங்குருகு (பக்கி)

## வேறு தரு.

இராகம் கலியாணி—ஆதிதாளம்.

பல்லவி.

வந்துசேருதய்யே பாவையெல்லாம் வந்துசேருதய்யே.

அநுபல்லவி.

வந்துசேருதய்யே சுந்தரஞ்சேர் துங்க
மாமயூரகிரிச் சாமிநாதர்நாட்டிற்
கொந்துகொந்தாகப்ப ரந்தெழுந்துமீனைக்
கொக்குமொக்கிவிக்கிச் செய்க்குள்க்கக்கித்தக்கி(வந்து)

சரணங்கள்.

கார்த்திகைக்கட்டளைச் சாத்தனேந்தலழ
கானயிடையனேந்தல் மீனைமிகவுமேய்ந்து
சாற்றுஞ்சிவரியேந்தல் சிங்கமங்கைவயலுந்
தழைக்குநெற் குப்பைவயல்விளக்கும்பளச்செய்யிலும்(வந்)
ஓங்குபுகழ்நியமம் ஓகந்தாவயலில்விளக்
கும்பளமிருமா நிலம்புகுந்துபல
வான்குடிச்செங்கணி வயலில்த்திருவிளக்கு
மானிய மெனுமிரு மானிலந் தன்னிலும் (வந்து)
இலகும்அரம்பைகள் செலகிரீடைசெய்தற்
கேற்றமதுரநவ தீர்த்தமுஞ்சிறந்த
உலகடியூரணி நல்முங்கண்டுபிள்ளையா
ருழியேந்தற்பெருச் சாளியேந்தலிலும் (வந்து)
நீடுபுகழ்சேர்குடிக் காடன்வயலில்த்தேவ
னேரியுடன்மணியத் தார்வயலிலுங்கஞ்சம்
காடுமேரிசுன்ன வேடைகுமிழாங்குண்டை
நத்தித்தத்திப்பற்றிச் சுற்றிக்கத்திக்கெற்றி (வந்து)

ஏருலாவியபிடாரியேந்தல்விப்பிர
னேரியுடனிடும்ப னேரிகுறும்பன்வயல்
வாரிநேர்வலைய னேரிமீனைக்கண்டு
வாஞ்சை தோஞ்சு சாஞ்சு பாஞ்சு ராஞ்சு மேஞ்சு (வ)
மாபழனஞ்சேர்சிந் தாவடியேந்தலும்
வைய்யாபுரிக்கண்மாய்ச் செய்யவயலிலுஞ்
சோபிதமாமது ராபுரிக்கரைத்தென்னந்
தோப்பின் ரூப்பு வாய்ப்பு மூப்பு ரூப்பு ரூப்புள் (வந்து)
மாரணசூரசம் மாரகெம்பீரகு
மாரசாமிவாழ்ம யூராநாகநாட்டிற்
கார்புயல்போல்பக்கி சேரவாடைப்பொடியைக்
காற்றுப்பார்த்துத் தூத்துச் சாத்துக் கேத்த வாத்தும்

## வேறு தரு.

இராகம் தோடி ரூபகதாளம் சாப்பு

பல்லவி.

பேசாதய்யே அய்யேபொறுபொறு சற்றே பொறுபொறு
பேசாதய்யே அய்யே பொறுபொறு சற்றே பொறுபொறு

அநுபல்லவி.

தேசுயருஞ் சிகண்டிமலைச் செவ்வேள் தனதுபண்ணைச்
செய்களோரத்தில்வந்து சேருது பக்கி
கேருது மீனை வாருது வேட்டை நேருது பொறு (பேசா)

சரணங்கள்.

கூடியே பக்கிகள்ராகம் பாடிக் கயலைத்தேடி நாடிப்
படிபுகழ்குன்றக் குடிவயலினில்ப்
பக்கிமிக்கப்புக்கிக் கிக்கிக்கிக்கியெனப்
பதுங்குது பயந் தொதுங்குது கதுகுதுங்குது மொது மொதுங்குது பொறு (பே)
நாறறிசையும் புகழ்சேர்குன்றைக் கார்த்திகேயன் பண்ணைச்சாத்தி வயக்கலிற்
கண்டைமீனைக்கண்டு கொண்டுமண்டியண்டிக்
காற்குட் டாக்கி நீக்கிமூக்கிற்றூக்கிநோக்கிக்
களிக்குது தின்று கெளிக்குது ஒன்றுமுளிக்குதுசிலதொளிக்குதுபொறு (பேசா)
எண்டிசையும்பிச்சைப் பண்ணையில்ப் பண்டைய நாள்முதலுண்டானசெய்களும்
பார்த்துப்பதுங்கி ஒட்டைக் காத்தான்வயற்புக்கிப்
பக்குங்கொக்கும் எக்கும்ஒக்கும் மொக்கச்சிக்கும்
பாரையே செங்கால்நாரையேகுகன்பேரையேயெண்ணிநேரையேபொறு (பேசா)

## வேறு தரு.

இராகம் கல்யாணி ஆதிதாளம்.

கண்ணிகள்.

பொறுபொறுபக்கி மிகுதியடா வரும் புட்குலத்தைத் தொகைமதியடா
முருகர்தாளினைத் துதியடா கண்ணி முறையாய்ச்சொல்லுகிறேன் பதியடா (1)
கதிக்குட் பிச்சைப்பண்ணைக்குரிமையாய்ச்சொக்கநாதன்வயக்கலிற்பெருமையாய்
மதிக்குமீனாம்பிகைவயலிலே சுப்பிரமணியவயக்கலின்செயலிலே (2)
நாயகர்வயக்கல் நடவிலே செங்கால் நாரைவருமந்தக்கடவிலே
சாயாமல்க்கண்ணியை நாட்டடா சேவல்த் தட்டினிலேகண்ணிபூட்டடா. (3)
மருதநாயகர்திருத்தலாம் அதில்வரிசையாய்க் கண்ணிபாத்தலாம்
குருகினங்களும் வரத்தடா கைகூசாமல்க் கண்ணியைப்பாத்தடா (4)
தியாகராஜவயல்வரப்பிலே பக்கிசேரவருமெத்தபரப்பிலே
வாகுடன்கண்ணிகளேணடா பக்கி வாரதிரட்சியைகாணடா (5)
சங்கரலிங்க முனீஸ்வர வயல்தன்னில் வரும்பக்கிமீசுரம்
அங்கனேகண்ணியைத்திருத்தடா பக்கியவளவும்நமக்குருத்தடா (6)
சாமிசபாபதிவயலிலே குன்றைச்சண்முகமூர்த்திதன்செயலிலே
சீமூதமாய்பக்கிவருதடா அதைச்சென்றுபிடிப்பதேவிருதடா (7)
இன்னம்பலவுளசெய்யடா அதற்கேற்ற தோர்கண்ணிகள்வையடா
மன்னியகைவலைவீசடா பக்கிவர வரச்சன்னைகீசடா (8)
ஆவலுடன் கண்ணிநாட்டடா சொல்லும் ஆறெழுத்தைமனஞ்சூட்டடா
சேவலன்பாதத்தைநோடா இதோசிக்குது பக்கிகள்பாரடா (9)

## வேறு தரு.

இராகம் பரசு—ஆதி தாளம்.

பல்லவி.

சிக்கக்கொண்டதையே பறவையெல்லாஞ்
சிக்கிக்கொண்டதையே

அநுபல்லவி.

சிக்கிக்கொண்டதையே சிகண்டிமலைக்குமர
தேசிகனைத்தொழுதுவீசும் வலைக்கண்ணிக்குள் (சிக்கிக்)

சரணங்கள்.

காசினியிற்கொடிய பாசமெனுமுவகை
யாசைவலையிற்சிக்கு மாசர்மனம்போலவும் (சிக்கிக்)
கலைசிறிதுமறியாப் புலறிவினமாதர்கள்
கலவிமயக்கத்தினிற் குலவிச்சிக்கியதுபோற் (சிக்கிக்)
முருகர்பதத்தினிலன் புருகுமனத்திலின்பம்
பெருகுமானந்தப்பொருளருகிற்சிக்கியதுபோற் (சிக்கிக்)

## வேறு தரு.

இராகம் கல்யாணி—சாப்பு தாளம்.

பல்லவி.

தேலிவிட்டுப்போயினுமய்யே பாவையெல்லாந்
தேலிவிட்டுப்போயினுமய்யே

அநுபல்லவி.

கேலிவிட்டுப்போயினுமய்யே வாலிபத்திற்சுந்தரனென்ற
வேலரைத்துதியார்செல்வம்போலவும்பக்கிவர்க்கங்கள் (தே

சரணங்கள்.

நாடியேபைந்தமிழ்ப்பொருள்த் தேடியேசிங்காரகவி
பாடியபாவலரைக்கண் டோடியவுலுத்தர்போலுந் (தேலி)
மெட்டியணிவிழிவலையாற் கட்டியமாதர்மயக்கை
விட்டுமுனிவோர்வனத்திற் பொட்டனசெல்வனபோலும்
ரஞ்சிதமயிற்கிரிவலஞ் செய்வோர்பூர்வசென்மத்தின்
சஞ்சலமும்போனதுபோல்பிஞ்சிப்பக்கிகளெல்லாம் (தேலி)

விருத்தம்.

தொய்யிலெழுதியகளபச் சுவண மேருச்
சுவர்க்கவிரு யாதருட றணைவன் கூர்வேற்
கையன்மயி னகக்குமரக் கடவுணாட்டிற்
கலந்துவயற்களில்றுட்டுங் கண்ணிக் குள்ளே
பய்யவந்து சிக்கிப்பல் பக்கியெல்லாம்
பறந்தோடித் தேலியபின் பரிந்து சிங்கன்
மையல்கொடு செய்யகுறச் சய்யல் பேசும்
வங்கணச்சிங் கியைத்தேடி வழுத்துவானே.

## தரு.

இராகம் புந்நாகவராளி—ஆதிதாளம்.

பல்லவி,

சிங்கியெங்கேகாட்டடய்யே யென்வங்கணச்
சிக்கியெங்கேகாட்டடய்யே

அநுபல்லவி.

சிங்கியெங்கேகாட்டடய்யே யிங்கிதகேமகன்னாட்டில்த்
துங்கமலைவேலரிரு செங்கழலிணையைப்போற்றும் (சிங்கி)

சரணங்கள்.

(1) முத்தமிட்டுக்கொள்ளுவாளய்யே மருவச்சொல்லி
மெத்தமெத்தத்துள்ளுவாளய்யே
அத்திமக்க கக்கையொத்த சித்திரத்தனத்தையுற்ற (சிங்
(2) மிஞ்சிமிஞ்சிப்பேசுவாளய்யோ சரசந்தனிற்
கொஞ்சிக்கொஞ்சிப்பேசுவாளய்யோ
வஞ்சகஞ்செய் நெஞ்சவஞ்சி ரஞ்சிதஞ்சே ருஞ்செழுஞ்சொற்
(3) பக்கிபொறிச்சிட்டுக்கருவாள் கலவிசெய்ய
அக்கரையாய்க்கிட்டவருவாள் சய்யோகமதில்
சற்கரைக்கி ளிக்குமிக்க சொற்குதலைக்குழக்கியவற்க (சிங்கி)
(4) கூசிமொழி பேசிநொடிப்பாள் குன்றைக்குமர
தேசிகன்மேற்சிந்துபடிப்பாள் குங்குமகந்தம்
வாசமிக வீசவுமுல் லாசவித மேசெயுமென் (சிங்கி)

விருத்தம்.

விற்புரு மின்னைவென்று மெல்லிய சிறுவர்சோரா
மற்புயன் சிகண்டிச்சுப்பிர மண்ணியர் வளருமட்டிற்
கற்புள சிங்கிமீதிற் காதலா சிரிமேற்கொண்ட
அற்புதச் சிங்காசிங்கி க்கடையாளஞ் சாற்றுவாயே.

தரு

இராகம் காம்போதி—ஆதிதாளம்.

பல்லவி.

வங்கணக்காரியென்சிங்கிக்கடையாளஞ் சற்றே
வழுத்தக்கேளட அய்யே

அநுபல்லவி.

செங்கமலைவளருந் தங்கமலைக்குமர
தேசிகர்கோமாட்டிலே மேட்டிமையான (வங்கண)

சரணங்கள்.

(1) கச்சிருக்குமுலையி னிச்சிருக்குமடய்யோ
காரியக்காரிவகைக் காரியிங்கிதக்காரி
குச்சிருக்குங்குழலில் மொச்சிருக்கும்வண்டருங்
கோலமுமெத்தவுண்டய்யோ மெய்யேசொன்னேன் (வங்)
(2) ஆருக்குந்தெரியாமல் ஊருக்குளிருக்குமோ
ரடையாளமுண்ட திடையாழங்கண்ட

பேருக்குக்கெட்டாதே பாருக்குளவள்ளலுப்
பேர்சுக்காரியடையே மெய்யேசொன்னேன் (வங்கண)

(3) மெல்லச்சிரிக்கிற்பல் லுமுல்லைப்பூப்போலுங்கண
மெட்டுமிரட்டும்விழி மெட்டுஞ்சிந்தூரப்பொட்டுஞ்
சொல்லுமலைநுரையை வெல்லும்பேர்களுண்டோ
தோகைமயிலடீ அய்யே மெய்யேசொன்னேன் (வங்கண)

(4) கந்தபரிமளமி குந்துபூசுவள்ளலுக்
காயக்கமுண்டுமுக மாயக்கலைகயத்தென்
சிந்தையுருகக்குன்றைக் கந்தர்பதக்துதித்துச்
சிந்துபடிப்பளடிய்யே மெய்யேசொன்னேன் (வங்கண)

விருத்தம்.

செங்கதிர்வெண் மதியனையும் புடைசூழ் கின்ற
சிகண்டிமலைக் குருபரனே சிகர்க்கன் பான
சங்கினங்கடவிர்பழன சோமநாட்டிற்
றழைக்கிடுஞ்சின் கலும்பகன்ற படியே சிங்கிக்
கங்கையானங்கெல்லா மறிந்து பாங்கன்
அவனியெல்லாந் தேடியுங்கண் டழைத்து வந்து
சிங்கன்முன்காட் டிடமனது சந்தோஷித்துச்
சிங்கியைச்சிந் தித்திவைகள் செப்பு வானே

தரு.

இராகம் புன்னாகவராளி சாப்புதாளம்

கண்ணிகள்.

இத்தனை நாளாக வென்னைத்தனி யாகவைத்
தெங்கே போயிருந்தாய் சிங்கி—பாரில்
இப்படித் தானெனைத் தப்பிப் பிரிந்துநீ
யெங்க நாளிருந்தாய் சிங்கி
நித்தநிலஞ் செந்நெல்லில் நித்தமும் விளைகின்ற
சோமநாட்டிற் சென்று சிங்கா—மாதர்
கெஞ்சக் குழிசொல்லிச் சஞ்சரித்துக்கண
நிதிபெறப் போனேனடா சிங்கா
[illegible]விபுலைப் பதிகந்ம் தெரிவொன்ன லாமந்திர
[illegible]மையும் கற்றமுமேதா குறக்
[illegible]த்திரக்குங் கொடுத்துக் கஞ்சிவாங்கிக்
குடிக்கு நமக்கடி சிங்கி

அறியாமலேகள்ளு வெறியா லாராதே நாட்
டரிவையர்க் குக்குறி சொன்னேன் எந்தன்
அருமை யறிந்தவர்கள் பெருமை யுடனே தந்த
அரிய கூறைகாரை காண் சிங்கா
கொண்டைக்கு மேலேயோர் பண்டமென்னமோபோலே
குறுகுறென்று விழித்துக் கொண்டு அதோ
குக்கி யிருக்குதந்த வக்கணை தனையெக்குக்
கூறடி வங்கணைச் சிங்கி
தண்டமிழ் செறிசி கண்டிக்கு கன்மோகனத்
தையலார்க்குக்குறி சொன்னேன் அந்தச்
சந்தமடவார்கள் தந்தரத்தின யிழைத்த
தமணியக் கொண்டைகாண் சிங்கா
ஐந்தலை நாகமுன் கொந்தளா கத்தில்பின்
ருபிவ தென்னடி சிங்கி=சற்றும்
அஞ்சாதே உன்மன தென்செய்வே னென்மன
தஞ்சாதே வஞ்சகச் சிங்கி
சுந்தரன் தென்குளந் தைப் போதகுருசாமி
துரைமகி ழக்குறிசொன்னேன் அவர்
தோகைநல் லார்மகிழ்வாகத் தந்தசடை
நாக மிதுவடா சிங்கா
என்னடி புன்னைக்காய் தன்னிலே பித்தாளை
யிட்டணிந்த தென்ன சிங்கி=நமக்
கேற்குமோ நங்குலத்தார்க்கு மிதுவெல்லாம்
வச்சென் றறியாயோ சிங்கி.
கன்னய மாதவன் வேலாயுதமுனி
நாதன் வாழ்கக்குறி சொன்னேன் அந்த
கற்றவன் தந்திடும் ரத்தின மணிருத்தி
ராக்ஷக் கண்டியடா சிங்கா
நெத்திக்கு மேலொரு அத்திப்பூப் புத்ததில்
நேரே படர்ந்த தென் சிங்கி=யிந்தச்
சித்திரமான விதத்தை நீயெக்குத்
தெரிய வுரையடி சிங்கி
பத்தியுடன் கூட்டல் ஸ்தானிகன் விக்கிரம
பாண்டியற் குக்குறி சொன்னேன் அவன்

பைக்தொடி யார்மெச்சித் தந்தரத் தினமணிப்
பைம்பொற் சுட்டி யடா    சிங்கா
பேரடியா தாகச் செவிக ளிரண்டையு
மூடிக்கிடப்பதென்    சிங்கி = இந்த
மூக்கையாக தன்னையெக் குத்தெரியமோ
பூந்தாலா காதோடி    சிங்கி
கூடல் கொடுங்குன்ற ஸ்தானிக னென்குப்பு
தேசிகர்க்குக் குறி சொன்னேன்    அப்போ
கொண்டாடி யகுலச் சேகர மால்தந்த
கொந்தள யுப்புகாண்    சிங்கா
கூடிய மூக்குக் குமிழிற் புடலம்பூக்
கொத்தொட்ட தூங்குதென    சிங்கி = யிந்தக்
கோபமையு முகத்தையினை மூப்பையையுங் கண்டு
[illegible]    சிங்கி
தாமரைப் பொற்றுய்ய கொடுங்குன்ற மேவிய
ஸ்தானிகர்க்குக் குறி சொன்னேனே    அவர்
தந்திரி மூக்குத்தித் தொங்கல் விலைமதியாத்
தாள மிதுவடா    சிங்கா
கண்டத்தி லேஅல்லித் தண்டைத் தரித்திடக்
காரிய மேதடி    சிங்கி = யிந்தக்
காமலைத் தையெய்க்குத் தோரணை யாகக்
கருதுவாய் வங்கணைச்    சிங்கி
மண்டலம் போற்றும் புத்தூர் ஸ்தானிகர்க்கு
வாகுடனே குறி சொன்னேனே    அந்த
மன்னவர் தந்திடுஞ் சொர்ணத் திருவேலை
வன்னகத கொடியடா    சிங்கா
சாதக மாகவே தூது வளம்பழம்
தலைணையுங் கோர்த்ததேன்    சிங்கி = அதைத்
தாட்டிக மாக அணிந்திட்ட மேன்மையைச்
சாற்றடி வங்கணைச்    சிங்கி
நீதர் திருக்கோள நாதர்தன் கோயில்ஸ்தா
னிகருக்குங் குறிசொன்னேன்    அவர்
கோத்துடன் தந்த சாதிப் பவளகி
லவிய கோவைகாண்    சிங்கா

கொங்கைக் குடத்தினிற் சங்கம் பழத்திணைக்
    கொத்துக் கொத்தாகவே    சிங்கி=மனங்

கூசாமல் கோருத் தணிக்திடும் விந்தையைக்
    கூறடி வங்கணச்    சிங்கி

யென்குல தெய்வமாந் துங்க மலைக்கும
    ரேசர்தங் கோயில்ஸ்தானீகர்    நிதம்

எந்த னருமை யறிந்து மகிழ்ந்தவ
    ரீய்ந்தமுத் தாரங்காண்    சிங்கா

சிற்றிடை யைச்சுற்றி ஓட்டிக் கிடக்கிற
    சித்திர மென்னடி    சிங்கி=இந்தச்

சேதியை யெக்குத் தெரியும் படிக்குநீ
    செப்பவு மாகாதோ    சிங்கி

சத்தி யுமைவாழ் சிராசை யின்மேவிய
    ஸ்தானீகர்க் குக்குறிசொன்னேன்    அவர்

சம்பிரம முடன்மெச்சிக் கெம்பீர மாய்த்தந்த
    தங்க ஒட்டியாணங்காண்    சிங்கா

பய்யப் பயிலுமென் சய்யோக வஞ்சியின்
    பார முலைமார்பிற்    சிங்கி=யேதோ

பச்சுப்பச் சென்று முழிச்சுக் கனமாய்ப்
    படர்ந்து கிடக்குதென்    சிங்கி

வய்யம் புகழும் பிரமனூர் மேவு
    மகாசனங் கட்குமூரவர்க்குங்    குறி

வைத்ததெல் லாஞ்சொன்னேன் மெய்த்தவர் தந்திடும்
    வச்சிரப் பதக்கங்காண்    சிங்கா

மண்டல மிட்டொரு குண்டலப் பூச்சியை
    வக்கணை யாய்க்கையிற்    சிங்கி=பூணும்

வாறென்ன கூறின்ன வாறென்ன மோகன
    வங்கணக் கொங்கணச்    சிங்கி

அண்டர் பணியுமங் கைப்பதி ஸ்தானீக
    ரானவர்க் குக்குறிசொன்னேன்    அவர்

அத்தமி ரைஞ்ஞூறு பெற்றிட வுந்தந்த
    அஸ்த கடகங்காண்    சிங்கா

மின்னட்டிட தன்னை முளங்கைக்கு மேலாக
    வீக்கிக் கிடக்குதென்    சிங்கி=இதை

மேரையென் றெண்ணிய காரிய மார்செய்
  விசித்திர மீதடி சிங்கி
சொர்னக்கா லீசுர தேசிகர்க் கும்வளர்
  சுப்பிரமணிய தேசிகர்க்கும் குறி
சொன்னதி லுலவா ரென்னைமெச் சித்தந்த
  சொர்னக்கை வந்திகாண் சிங்கா
யெத்தனை யோபலிச் சென்றுந் தனுலிடை
  யெல்லா மறைத்ததென் சிங்கி—இதை
எக்குத் தெரியும்ப டிசுருக்கு றுக்கி
  விளம்படி வங்கணைச் சிங்கி
முத்தய மால்துணை யாலசுப் பிரமண்ணிய
  முக்கியனுக் குக்குறிசொன்னேன் அவர்
முப்பது பொன்பெற அப்போதே தந்திடு
  முத்து வர்ணச்சேலைகாண் சிங்கா
மங்கையே யின்னை விரல்களைச் சுத்தி
  வளைந்து கிடப்பதென் சிங்கி—இந்த
மார்க்கத்தை யெந்தன்முன் நீர்க்க முடனே
  வழுத்தடி வங்கணைச் சிங்கி
வெங்கள நம்பியார் சுப்பிர மண்ணிய
  வேந்தனுக் குக்குறிசொன்னேன் அவர்
பெய்சியே தந்திடும் உச்சித மானவி
  ரற்கணை யாழிகாண் சிங்கா
காலினில் சன்மைச்சிக் கட்டினைக் கோர்த்துக்
  கலகல வென்றணி வானேன் என்ன
காயக்க மோமுகமாயக் கன்னிசுறுக்
  காகச்சொல் வாயடி சிங்கி
ஞாலம் புகழ்காணிக்கன் சோலைமலை
  ராசனுக் குக்குறி சொன்னேன் மன
ரம்மிய முடன்குறி செய்மைமையன் றேயவர்
  நல்கு பதசாங்கரன் சிங்கா
ஓலிய மானபின் பூவடி மீதில்
  ஒலித்துக் கிடப்பதென் சிங்கி—அதை
உள்ளப டிக்குநீ விள்ளுவ தேமெத்த
  உத்தம மாமடி சிங்கி

கோவிலுந் திபோகர் வயிராவி தலத்
    தார்க்குங் குறிசொன்னேன் — சிங்கா=அவர்
கொண்டாடித் தந்திடுந் தண்டை சிலம்பு
    கொலுசுக ளீதடா — சிங்கா
இந்தப் படிக்குக் குறிசொல்லப் போனநீ
    என்னை நினைத்தாயோ — சிங்கி=உன்னை
பெண்ணி யெண்ணி மனம் புண்ணாகித் தேடி
    பிரமித் திரிந்தேனே — சிங்கி
அந்தப் படிக்கு நானுன்னைத் தேடி
    அலைந்து திரிந்தேனே — சிங்கா=நீ
யறியாம லேகள்ளு வெறியாற் றிரிந்திட்டா
    லார்மேல்க் குறைபாடா — சிங்கா
ஆகட்டும் போனது போகட்டு மேலினி
    யாகிலு நாமிருவோருங் — கூடி
ஆசைக் கலவியுல்லாசத் துடன்விளை
    யாட வாராமோ — சிங்கி
தாகத்துடனப் போகத்தி லேமன
    தாகத் திரும்பினேன் — சிங்கா-யினிச்
சந்தித்த பின்னுங் கடங்க லுண்டோகூடித்
    தானனு போகிப்போம் — சிங்கா
தன்னையிந் திக்காம சன்னத மென்னைத்
    தலைசுற்றி யாட்டுதே — சிங்கி=இனித்
தாமதசஞ் செய்யாதே காமினீ யென்மேல்த்
    தயவுசெய் வாயடி — சிங்கி
அன்னியம் போலென்னைச் சொன்னது தானென்ன
    ஆக்கப் பொருத்தநீ — சிங்கா=சற்றே
ஆறப்பொறுக்காதோ மீறக் கிணற்று நீரை
    யாறிழுத்துப் போமோ — சிங்கா
பள்ளத் தண்ணீரினை வெள்ளங் கொண்டுபோகுதோ
    பதறுதே யென்றுயே — சிங்கி=இந்தப்
பயிலும் ஒயிலும் மொழிக் குயிலு மெத்தப்பகட்டிப்
    பசப்பு மெங்கேபடித்தாய் — சிங்கி
உள்ளத்தைத நான்சொன்னாற் கள்ளத்தை நினண்ணி
    யுரைக்கின்ற முறையென்ன — சிங்கா-வாழும்

உலக மதனிலெந்தன் குலமு நலமுமின
    முறைக்குந் தெரியாதோடா   சிங்கா
நேசத் துடன்பரி யாசத்தி லேசொல்லும்
    நீதியில் லாமலே   சிங்கி-வேறே
நிந்தையென் றெண்ணாதே சிந்தையு டன்
    நித்தமும் வாழ்வோமே   சிங்கி
ஆசைக் கல்வியுல் லாசத்து டன்செய்வ   கூடி
    னன்புடன் கூடியே   சிங்கா-குன்றை
ஆறுமு கன்பதங் கூறியே வாழியென்
    றாடுவோம் வாருங்காண்   சிங்கா

## விருத்தம்.

அந்தணர் வேள்விவாழி ஆரண நான்கும்வாழி
தந்திர ஆகமஞ்சொல் சைவமும் வாழிவாழி
சந்திர சூரியரும்வாழி தமிழ்வல்லோர் மிகவும்வாழி
சுந்தரச் சிகண்டிக்கந்த சுவாமிதாள் வாழிதானே

குன்றக்குடி குறவஞ்சி.

முற்றிற்று.

Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS-90

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 9 | தன்மையுற்ப | தன்மையுற்ற |
| ,, | 12 | தவறன்றி | தவறின்றி |
| 4 | 15 | பிரதட்சண்ந் | பிரதட்சணஞ் |
| 5 | 26 | தென்றனை | தென்றன் |
| 6 | 5 | குவவன்னனி | குறவன்னணி |
| ,, | 13 | பரிசலிக்க | பரிசனிக்க |
| ,, | 19 | குபவந்சி | குறவஞ்சி |
| 7 | 18 | புசல் | புயல் |
| 11 | 6 | கனமதி | ககனமதி |
| | | சாற்றக்கவி | |
| 13 | 13 | விரக்சமோ | விரகமோ |
| 14 | 6 | வைகைந்தனை | முறைதவளைந்தா |
| 16 | 29 | வாக்கியன் | வாக்யன் |
| 17 | 11 | தமிழ்தனைப் | தமிழ்த்தேனைப் |
| | | குறவஞ்சி | |
| 7 | 31 | சிகதிண்டி | சிகண்டி. |
| 12 | 16 | தலைருயிர்த்தில் | தலகத்தில் |
| ,, | 32 | குலவும்வேதாவும் | குலவுவேதாவும் |
| 15 | 7 | தக்கிமிதிகதிமித | தக்திமிதிதிமித |
| ,, | 21 | யாவுமொரு | யாருமொரு |
| ,, | 24 | பனதிபுகழ் | ணபதிபுகழ் |
| ,, | 26 | சீபாதககுரு | சீபாதகுரு |
| 16 | 9 | நாகரும் | நாக்[illegible] |
| ,, | 17 | புரியும் | புரி[illegible] |
| ,, | 31 | கவிஞனென்மை | கவிஞனென |
| 20 | 22 | வரராய் | வீரராய் |
| 23 | 18 | எந்தன் | எந்தன் |
| 26 | 15 | அயிலாற் | வயிலாற் |
| 28 | 12 | பாகத்தில் | ப[illegible]த்தில் |
| ,, | 18 | நாரி | நாழி |
| ,, | 28 | உக்தமி | உத்தமி |
| 30 | 21 | சீகளலற் | சீகளாற் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 31 | 3 | வெண்றென் | வொன்றெண் |
| 36 | 4 | பலல்வி | பல்லவி |
| ,, | 23 | கடட்ளை | கட்டளை |
| 38 | 15 | ரூபகதாளம் | ரூபகதாள |
| 40 | 30 | சிக்கி | சிங்கி |
| 43 | 5 | காரை | காறை |
| ,, | 12 | சங்தக | சங்க |
| ,, | 18 | தென்குளங் | தென்குழங் |
| 44 | 13 | கொதம்தோட | கொத்ம்தோட |
| ,, | ,, | சிக்கி | சிங்கி |
| 45 | 34 | முளங்கை | முழங்கை |
| 46 | 10 | படி கரு | படிக்கு |
| ,, | 23 | யாளி | யாழி |
| 47 | 24 | காமி | காமினி |
| 48 | 3 | முரை | முறை |



ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்மபாரதீ ஸ்வாமிகள்

# ஸ்ரீகாலடிச் சாரதாம்பிகை மாலை.

இது
திண்டுக்கல் வக்கீல் ஸ்ரீமத் எல். ஏ. வெங்குஸாமி ஐயர்,
அவர்களால் இயற்றப்பெற்றது

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

சென்னை:
கணேஷ் கம்பெனியாரால்,
பதிப்பிக்கப் பெற்றது.

MADRAS:

PRINTED BY S. MURTHY & CO., THE "KAPALEE" PRESS,

305, THUMBU CHETTY STREET.

# ஸ்ரீகாலடிச் சாரதாம்பிகை மாலை.

காப்பு

**விநாயகர் துதி**

சீரு லாந்திருக் காலடிப் பதியினிற் றிகழுஞ்
சார தாம்பிகைத் தாயின்மெய்ச் சரணபங் கயத்திற்
கேரெ லாம்பெறு மியற்றமி ழலங்கலொன் றியற்றத்
தார காசயக் கயமுகன் றாண்மலர் துணையே.

**வேறு**

ஆர ணப்பொரு ளாகிய வைங்கர
வார ணத்தின் மலர்க்கழல் வாழ்த்துவாம்.

**முருகன் துதி**

நிலமகட்குத் திலகமெனப் பொலிதருசீர்க் காலடியி னிலவுந் [தெய்வக்,
குலமகட்குச் சதுமறைநா வகங்குலவு வெண்சலசங் குலவுஞ் [செல்வக்,
கலைமகட்குக் கலைக்கெட்டாத் தலைமகட்குக் கவியணியல் கவி னச் சூட்ட,
மலைமகட்குச் சிறுமதலை மயிலுகந்த பெருமுதலை வணக்கஞ் [செய்வாம்.

**வேறு**

ஹரஹர வெனமுனி
வரர் சுரர் பணியுஞ்
சரவண பவனிரு
சரண் சரண் சரணே

## நூல்.

### கலி நிலைத் துறை

உலகெ லாந்தொழு தேத்திடற் குரியவத் தமியே
திலக வாணுதற் செல்வியே திகழுமாண் புடைமெய்ப்
புலமை மேவுசீர்க் காலடிப் பதியினிற் பொலியுஞ்
சலச மாமுகத் தையலே சாரதாம்பிகையே. (௧)

அருண லங்கொடுத் தடியரை யாட்கொள வமைந்த
கருணை யங்கட னீயெனக் கண்டுகொண் டுனையித்
தருணம் வந்தடைந் தேன்மலர்த் தாளினை யெனக்குச்
சரண வாற்கதி வேறிலை சாரதாம் பிகையே. (௨)

பஞ்சின் மெல்லடிப் பாவையே நின்மலர்ப் பதத்தை
நெஞ்சு ளேநினைந் துணர்ந்துநின் னெடும்புகழ்த் திறத்தைச்
செஞ்சொ லாற்றுதித் துருகிடத் தெரிகிலாச் சிறியேற்
கஞ்ச லஞ்சலென் றுண்டருள் சாரதாம் பிகையே. (௩)

ஓமெ னும்மறைக் குட்பொரு ளாகிநின் றொளிருஞ்
சேம நன்னிதித் தெய்வமே திருவெலாஞ் செழிக்குங்
கோம ளத்திரு வடிவுடைக் குமரியே குளிர்வெண்
டாம ரைக்கண் வாழ்தலைவியே சாரதாம் பிகையே. (௪)

பொற்பி னுக்குயர் நிலையெனப் பொலிந்தபூ தரமே
கற்பி னுக்கணி கலனெனக் கவின்செய்கற் பகமே
விற்ப னர்க்கருள் விமரிசை விளங்குகா லடியிற்
தற்ப தத்தணி நிலைபெறுஞ் சாரதாம் பிகையே. (௫)

பாவி யேற்கிதம் புரிந்திடப் பரமகா ருணியத்
தேவி நீயலாற் றிக்குவே றிலையெனத் தெளிந்து
கூவி னேன்முறை கேட்டருள் கொடுத்திடன் முறையென்
றாவி யேயுயிர்க் கருந்துணைச் சாரதாம் பிகையே. (௬)

மாச கன்றமெய்ஞ் ஞானிகண் மனமெனத் தெளிந்து
மீச னாரரு ளெனப்பரந் திருகரை புரண்டுங்
காச லம்புசம் பூரணைக் கரைக்கண்வெண் பதும
வாச னத்தின்மீ தமர்ந்தஸ்ரீ சாரதாம் பிகையே. (எ)

அன்பி னானிறைந் தகங்கசிந் துனைத்தொழு மடியார்
துன்பெ லாங்கெடுத் தருட்சுகங் கொடுக்குமெய்த் துணையே
இன்ப நாட்டினிற் கிறைவியே யிறைஞ்சுவார் முடிக்குத்
தன்ப தாம்புய முடித்திடுஞ் சாரதாம் பிகையே. (அ)

கந்த நாண்மலர்க் கருங்குழற் கன்னியர் மயலிற்
சிந்தை நைந்துழன் றுன்கழற் சீர்பெற நினையா
விந்த நாயினேற் குய்வழி யெவ்வழி யுயிர்க்கு
ளந்தர் யாமியா யிருந்தொளிர் சாரதாம் பிகையே. (௯)

கங்குல் போக்குதற் கெழுஞ்செழுங் கதிரெனக் கதித்துப்
பொங்கி யார்த்தெழும் புன்மதப் பொய்யிருள் கடிந்த
துங்க மாதவக் குரிசின்மெய்த் துறவியுள் ளகத்திற்
றங்கி யோங்குமா தங்கியே சாரதாம் பிகையே. (௰)

ஞான மூர்த்தியென் றுனைக்கலை யனைத்துமே நவிலற்
கான கீர்த்திநன் கமைந்தெள் ளமுதவா ரிதியே
தீன ரக்ஷகி யெனவுனைத் தேடிவந் தடைந்தார்க்
கான வின்பநற் கதிதருஞ் சாரதாம் பிகையே. (௧௧)

பற்றெ லாமொழித் துன்றிருப் பாதபங் கயத்திற்
குற்ற வன்புபூண் டுள்குவா ருள்ளொளி விளக்கே
குற்ற மார்ந்துளேன் குறையுளே னுளக்குறை தவிர்க்கச்
சற்றி ரங்குவை யேதனிச் சாரதாம் பிகையே. (௧௨)

செம்பொ னொற்றிகழ் ந்திடுமலர்ச் சேவடித் துணையை
நம்பி னோர்க்கருள் வழங்குமெய்ஞ் ஞானபூ ரணியென்
றும்பர் யாவருங் கரங்குவித் தின்னருட் கிரக்குஞ்
சம்ப னக்கலை மடந்தையே சாரதாம் பிகையே. (௧௩)

சொற்ப தங்கடந் தருட்சுக வடிவமாய்த் துலங்குஞ்
சிற்ப ராபரை யெனவுனைத் தெரிந்தகந் தெளிந்துன்
பொற்ப தந்தொழு துருகுமெய்ப் புனிதமா தவருக்
கற்பு தப்பத நிலைதருஞ் சாரதாம் பிகையே. (௧௪)

தீதெ லாநிறைந் திருள்செறிந் திழிந்தவென் சிந்தைக்
கோதெ லாமறுத் தாட்கொளுங் குணப்பெரு நிதியா
மாதி யெங்குரு சங்கரா சாரிய வமலன்
சாத நற்பதிக் காலடிச் சாரதாம் பிகையே. (௧௫)

புண்ணி யப்பெரு நதிகளிற் சிறந்தபூ ரணையாங்
கண்ணி யப்பெயர் கொளுநதிக் கரையமர்ந் தடியா
ரெண்ணம் யாவையு மெளிதினின் முடித்திடற் கிசைந்த
தண்ண ளிக்கயத் தடங்காடற் சாரதாம் பிகையே. (௧௬)

தவசி கட்குண்மே தகுநிலைச் சங்கர முனியா
லுபச யத்தினை யடைந்துமிங் கவர்திருக் கரத்தா
லுபச ரித்திடற் குரிமைபூண் டொழுகுதே வதையாய்ச்
சபல முற்றமா சனனியே சாரதாம் பிகையே. (௧௭)

பொன்னை யேவிழைந் துன்மணிப் பூங்கழல் விழையா
வென்னை யாள்வதற் குன்றிரு வுள்ளமெப் படியோ
வென்ன வேமிகக் கலங்கின னென்மனக் கலக்கந்
தன்னை மாற்றிடத் தகுங்கொலோ சாரதாம் பிகையே. (௧௮)

சிருங்க மாகிரிக் கொடுமுடிச் சிகரமீ திருந்தங்
கருந்த போநிலை யடைந்தடைந் தவர்க்கரு ளமுத
விருந்த ளித்திடும் பாரதீந் திரமுனி வியக்கத்
தருங்க லாநிதிச் சத்தியே சாரதாம் பிகையே. (௧௯)

மண்ணி லத்தவர் விண்ணவர் யாவரும் வழுத்தும்
ஷண்ம தப்ரதிஷ் டாபனு சாரியன் சனித்துக்
கண்வி ழித்தநற் பதியெனுங் காலடிப் பதிவாழ்
தண்ம திக்கெதிர் மதிமுகச் சாரதாம் பிகையே. (௨௰)

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.

வைய கத்தவர்க் கிதந்தரும் அறநெறி மறந்து
பொய்யி ருட்கடற் படிந்தவிப் புன்மதிப் புலையே
னுய்யு மாறுநின் கருணைபெற் றுதவியாண் டருளெம்
மையை மாமறைக் கரசியே சாரதாம் பிகையே. (உக)

பண்டை யூழ்வினை சிதைத்துவான் பதந்தரும் பதத்தைக்
கண்ட பேருளங் கருத்துமற் றனைத்தையுங் கவர்ந்து
கொண்டு காண்பருங் கதியவர்க் குதவுசீர்க் குணமே
தண்டு ரூப்பெருந் தகைபெறுஞ் சாரதாம் பிகையே. (உஉ)

ஏத மேபுரிந் தவர்க்குமிக் கிதந்தரு நினது
பாத மன்றிவே றிலையிக பரந்தரு துணையென்
றோது மாமறை யுரைத்திடு முண்மையொன் றறியா
வாத னுமெனக் கரணநீ சாரதாம் பிகையே. (உங)

திரும றைப்பெரு வனத்தினிற் றிரிந்துமம் மறைக்குத்
தெரிய டாவரு வுருவமாய்ச் சிறக்குமான் பிணையே
பிரம னவினின் றின்னிசை பெருக்குமம் பிகமே
சருவ லோகச ரண்யையே சாரதாம் பிகையே. (உச)

பொருவி லாவெழில் பொலியுமம் புயத்தமர் புனித
வுருவ மூன்றுமோ ருருவமாய்த் தழைத்துள முருகிப்
பரவு வார்விருப் பறிந்தவர்க் குடன்பரி சளிக்குந்
தரும மேம்படு காலடிச் சாரதாம் பிகையே. (உரு)

பாடு மன்பருக் கற்புதப் பொற்பத மலரைச்
சூடு வான்றருந் தோகையே தொன்மறைத் தொகுதி
யேடு கைக்கொடு பாரதீந் திரகுரு விதயத்
தாடு மாமயிற் பேடையே சாரதாம் பிகையே. (௨௬)

வெண்ணி றக்கலை யணிந்துமின் வெண்பணி யணிந்து
வெண்ணி றக்கம லப்பொருட் டினிதுவீற் றிருந்து
வெண்ணி றத்தமெய் வெண்ணகை கொண்டுசீர் விளக்கும்
பெண்ணி யற்பெரும் பிரமமே சாரதாம் பிகையே. (௨௭)

ஆயின் வேறிலையென்றுநன் கறிந்துபல் லுயிர்கட்
காயி நீயென வருமறை யாகம மனைத்து
மேய நின்புகழ் விரிக்கமேன் மேலுமே விரியுந்
தாயு மன்றிமற் றியாவுநீ சாரதாம் பிகையே. ௨௮)

தென்பெ ருத்திப் பயிர்விளை நிலனெனச் செழிக்கும்
புன்பு லானரம் பென்புதோல் செறிந்தபொய் யுடம்பிற்
கன்பு றுதுமெய்ப் புகழுடம் பளிக்குமா றறிவிற்
பின்ப டாதெனைப் பேணியாள் சாரதாம் பிகையே. (௨௯)

சத்த மாதர்கள் சூழவீற் றிலங்குசௌந் தரிய
நித்ய மங்கள சொரூபியே நிமலையே நிகில
கத்து ருத்துவம் படைத்துயர் காலடிப் பதியிற்
றத்து வப்பொரு ளாய்த்திகழ் சாரதாம் பிகையே. (௩௦)

MAHAMAHOPADHYAYA

கன்னி யென்றுனைக் கலையெலாம் வழுத்தினுங் காத்தற்
குன்னை யன்றிவே றின்னுயிர்க் கொருதுணை யறியேன்
என்னை நின்கழற் கடிமையா யென்றுகொ ளிசைக்கத்
தன்னை யன்றிவே றுவமையில் சாரதாம் பிகையே. (௩௧)

கால னாருயிர் குடித்திடக் கடுஞ்சினத் திரிக்குங்
கால நீயெதிர் வந்துகை கொடுத்துநின் கழற்சீர்க்
கோல மேவிடப் புரிவையாற் குவலய மதிக்கச்
சால நீடுநின் னெடும்புகழ் சாரதாம் பிகையே. (௩௨)

-ம் யாவையும் படைத்தளித் தழிக்குமுத் தொழில்கைக்
கொண்ட பேரருட் கொண்டலே யுள்ளகங் குழைந்து
தொண்டு பூண்டவர் நாவினிற் கவிநலஞ் சுரக்கச்
சண்ட மாருதம் பொழிந்திடுஞ் சாரதாம் பிகையே. (௩௩)

முப்ப தோடொரு பத்துடன் மூன்றெனுங் கோணச்
செப்ப மார்ந்தசக் கரத்தினிற் றிகழ்வுறு மணியே
எய்ப்பி லாத்தவ ரியற்றிடுந் தவப்பய னென்னத்
தப்பு றாதவர் மனத்தமர் சாரதாம் பிகையே. (௩௪)

பாச வேரறுத் துயர்நலம் பயக்குமா கருணைத்
தேசு லாவிய கலைமுதற் றேவியே திறஞ்சால்
நேச மேசெயா திருந்துமே னிலையடைந் திடும்பே
ராசை மேவினேற் கென்புகல் சாரதாம் பிகையே. (௩௫)

செங்கண் மாலய னரன்முதற் றேவர் சிந்தையினிற்
பொங்கி யார்த்தெழுந் தருணிலைப் புனிதபூ ரணமாய்த்
தங்கி யார்ந்தடங் காதுபூ தலத்திற்கா லடியிற்
றங்கி யோங்குமா தரசியே சாரதாம் பிகையே. (௧௬)

நேற்றி ருந்தவ ரின்றிருப் பாரென நினைத்தற்
கேற்ற மொன்றிலாப் பொய்யுல கிச்சைமே லீட்டாற்
கூற்று வன்செயற் கஞ்சுவ னச்சுறு தெனைக்காப்
பாற்றி யாட்கொளற் கரணநீ சாரதாம் பிகையே. (௧௭)

படியில் வேறில ரிவர்க்கிணை யெனப்புவி பழிக்கும்
படியி ழிந்தவ ராயினும் படிறரே யெனினும்
ஆடம லர்ப்பொழில் சூழ்திருக் காலடி யடைந்து
னடிய டைந்திடிற் புனிதரே சாரதாம் பிகையே. (௧௮)

ஆற்றெரு ணுதபே ரவலமே யாக்குமில் வாழ்க்கைச்
சேற்றை மேவுறுஞ் சிறடனேன் சிறந்தபூ ரணையா
மாற்றி லேபடிந் தகம்படிந் தடியடைந் தரும்பே
றூற்றன் மேவுதற் கருகனோ சாரதாம் பிகையே. (௧௯)

பத்தி யாம்வலைப் பட்டுமெய்ப் பத்திசெய் பவர்க்கு
வித்தை யாவையு மளித்திடும் வித்தக முதலே
சுத்த தத்துவ ஞானிபோற் சுருதிநூல் புகலுந்
தத்தை யங்கையிற் றாங்கிய சாரதாம் பிகையே. (௨௦)

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS-600 090.

ஆம யக்கடற் பட்டுழன் றேனையுன் னருட்பே
ருூம ரக்கலக் குரியவ னாக்கடுத் தாள்வாய்
காம ரம்பயில் வண்டுபூங் காவகத் திருந்து
சாம மோதுசீர்க் காலடிச் சாரதாம் பிகையே. (சக)

கண்டு தேன்கனி பாலமு தெனக்கருத் துவந்து
புண்ட ரீகமெய்த் தாளையம் புலன்கொளார் புவிமேற்
கொண்ட பாரமென் றறிந்துமாண் குலவுசீ ரடியை
யண்டி னேனிலை யம்மையே சாரதாம் பிகையே. (சஉ)

முடியின் மேற்கரங் குவித்துநின் முண்டக மலர்ச்சீ
ரடியி னைக்குமெய் யன்புபூண் டகநெகிழ்ந் துருகிக்
கடிகை யாயினுங் கதறிடாக் கசடனே னெனினு
மடிமை யாக்கடுத் தாண்டருள் சாரதாம் பிகையே. (சங)

நெஞ்ச மேகலங் காதுநன் னிலைகெடா திருந்து
செஞ்ச ரண்சர ணடைந்தாற் றிருக் கருணைப்
புஞ்ச மாயகி லாண்டமும் வியக்கநிற் புரக்கு
மஞ்ச மூர்ந்துவந் தமலையாஞ் சாரதாம் பிகையே. (சச)

வணங்கு வாரகத் திருந்தவர் வாயகத் தியற்பா
மணங்க மழ்ந்திட வழங்குறு பேரருண் மணியே
குணங்க ளாலுயர் குன்றமே காலடி குறித்தார்க்,
கணங்கெ லாந்துடைத் தருள்புரி சாரதாம் பிகையே. (சரு)

அன்பர் நாவிருந் துவட்டுறு இனிக்குநல் லமுதே
அன்ப ருள்ளகத் தூற்றெழு மானந்த நிறைவே
அன்பர் பக்கலின் றகன்றிடா வாருயிர்த் துணையே
அன்பெ னும்பெயர்க் கிலக்கமே சாரதாம் பிகையே. (சசு)

இடும்பை யாவையும் விளைத்திடர்க் கடலிடை யிருத்துங்
குடும்ப வாழ்க்கையிற் பட்டுழன் றுயர்நிலை குறிப்பான்
திடம்பெ றுமனத் தேனினித் தினந்தினஞ் சிறுமைத்
தடம்பு காதெனைக் காத்தருள் சாரதாம் பிகையே. (சஎ)

பார்த்த பேர்பவப் பிணியினைப் பறிக்குநன் மருந்தாந்
தீர்த்த நல்கிடும் பாரதீந் திரனெனச் சிறக்குந்
தீர்த்த தேசிக னிடையறு தீங்கருச் சித்தற்
கார்த்த வோருரு வாய்ந்தருள் சாரதாம் பிகையே. (சஅ)

அலம ரற்படு வார்தமக் கடைக்கலப் பொருளாய்ப்
பலக லைக்குயர் நிலயமாய்ப் பதிதபா வனனாய்
இலகு மெங்குரு பாரதீந் திரமுனி யிதயச்
சலச மேவுறு மன்னமே சாரதாம் பிகையே. (சகூ)

பொறிக ளைந்தையு மடக்கிநின் பொன்னடிக் கமலத்
தறிவி லேமனக் கவியினை யன்பினுற் றளைந்து
பிறிது றுதலீ தாங்குநின் றுன்னருட் பெரும்பே
றறியு மாறெனக் கருளுதி சாரதாம் பிகையே. (ருo)

கலியை யாயிரத் தொருபதி னென்றெனுங் கணக்கிற்
செலவி னங்குவெளு மியத்தின்மா கத்திளிற் றிங்கள்
குலவு பக்கமுந் துவாதசி யுங்குறித் துயர்பூ
தலத்து வந்துகா லடியமர் சாரதாம் பிகையே. (ருக)

பரம ஹம்ஸஸ்ரீ நரஸிம்ம பாரதீந் திரனுங்
கருணை வள்ளலாற் றுபித மடைந்துகா லடியை
மருவி மன்னுயிர்க் கருண்மழை வழங்குசூற் சலகந்
தரமெ னப்பொலி தருணியே சாரதாம் பிகையே. (ருஉ)

நாரி லாதுபூத் தொடைநயம் படச்செய நயக்குங்
கூரி லாமதி யேனெனக் குரைகழற் கன்பா
நாரி லாமனத் தேன்சொலு மாலைநீ நயக்குந்
தாரெ னக்கொளத் தகுவதோ சாரதாம் பிகையே. (ருங)

ஓது வார்வினைத் துயரொழித் துயர்கதிக் குய்க்குந்
தீதி லாப்புகழ்ச் சாரதா தேவிபூங் கழற்குக்
காத லாற்செயுங் குமாரதா சன்கவித் தெரியற்
கோதெ லாங்குண மாக்கொளா லருட்பெருங் குணமே. (ருச)

வாழி மேலதாங் காலடி வாழிநீ ரேழி
வாழி வெண்கம லாசனத் தம்மைமா தேவி
வாழி மாமறை வானவர் மறையவர் வழுத்த
வாழி மாதவச் சங்கரன் வண்புகழ் வளர்த்தே. (ருரு)

மங்களம்.